வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk மலர் : 04 08.04.2023 சனிக்கிழமை இதழ் : 120 பக்கங்கள் : 16

# எம்மிடம் பெரும்பான்மை உண்டு அதனால் அரசு வீழ்ச்சியடையாது

## பணம் கொடுத்து எம்.பிக்களை பெறும் தேவை இல்லை என்கிறார் ஷாந்த பண்டார



கொழும்பு, ஏப்ரல் 08

"அரசிடம் தற்போது ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான பெரும்பான்மை பலம் காணப்படுகிறது. எதிர்க்கட்சியினர் இணையவில்லை என்பதற்காக அரசாங்கம் வீழ்ச்சியடைப் போவதில்லை."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் ஊடக இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார.

15

இலங்கையர்கள் உட்பட

## ஆபத்தான நிலையில் படகில் பயணித்த 440 அகதிகள் மீட்பு!

ரோம், ஏப். 08

ஆபத்தான முறையில் - இரு நாட்களாக உணவும் தண்ணீரும் இன்றி மீன்பிடி படகில் பயணித்த இலங்கையர்கள் உட்பட 440 புகலிடக் கோரிக்கையாளர்கள் சர்வதேச கடல்பரப்பில் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், கிழக்கு ஐரோப்பாவின் மோல்டா நாடு அருகே எல்லைகளற்ற மருத்துவர்கள் தொண்டு நிறுவனத்தால் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த புகலிடக் கோரிக்கையாளர்கள் வட ஆபிரிக்காவில் இருந்து ஐரோப்பாவுக்கு இவ் வாறு பாதுகாப்பற்ற கடல்பயணத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் மீட்கப்பட்டனர்.

மீட்கப்பட்டவர்களில் 8 பெண்கள் மற் றும் 30 குழந்தைகள் உட்பட 440 பேர் உள்ள னர். இவர்கள் மீட்கப்படுவதற்கு முன்னர் இரண்டு

15

## போதை மாத்திரைகளுடன் உடுவிலில் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம்,ஏப்.08

36 போதை மாத்திரைகளுடன் உடுவிலில் 29 வயது இளைஞர் ஒருவர் கைதானார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து சுன்னாகம் பொலிஸார் நடத்திய தேடுதலில் உடுவில் - ஆலடி பகுதியில் வைத்து குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவர் பயணித்த மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டது. கைதான சந்தேக நபர் நீண்டகாலம் போதை மருந்து விற்பனையில் ஈடுபட்டு வருகிறார் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-03)

## ஜனாதிபதி தேர்தல் பிரசாரம்; யாழ்ப்பாணம் வருகிறார் டிலித்!



யாழ்ப்பாணம், ஏப். 08

ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து பிரசாரத்தை ஆரம்பித்துள்ளார் தென்னிலங்கையின் ஊடகப் பிரபலமும் பெருவர்த்தகருமான டிலித் ஜெயவீர. இவர் எதிர்வரும் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் டிலித் ஜெயவீர பல இடங்களிலும் பிரசாரப் பணியில் ஈடுபடத் திட்டமிட்டுள்ளதுடன், பல தரப்பினரையும் சந்தித்துப்

15

## ஐக்கிய மக்கள் சக்தி தலைமையை கைப்பற்ற சரத் பொன்சேகா முயற்சி?

கொழும்பு, ஏப். 08

சஜித் பிரேமதாஸவுடனான கருத்து வேறுபாட்டை தொடர்ந்து அவரின் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையை குறி வைத்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்திக்குள் அண்மை நாட்களாகப் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தக் குழப்பங்களிடையே ஒரு குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் சேர்ந்து இயங்கும் முடிவை எடுத்துள்ளனர். இது குறித்து நேற்று முன் தினம் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் முக்கியஸ்தரான ராஜித சேனாரட்ன பகிரங்கமாகவே தெரிவித்திருந்தார்.

இதனிடையே,

15



உலகெங்கும் வாழும் கத்தோலிக்கர்கள் நேற்றைய தினம் புனிதவெள்ளியை கடைப்பிடித்தார்கள். யாழ்ப் பாணம் மரியன்னை பேராலயத்தில் சிலுவைப் பாதை விசேட ஆராதனை நடைபெற்றவேளை...!

## அரசியல் பழிவாங்கல்கள் அதிகமாக இடம்பெறலாம்

திஸ்ஸ அத்தநாயக்க



கொழும்பு, ஏப்ரல் 08

உத்தேச புதிய பயங்கரவாத சட்டமூலத்தினூடாக அரசியல் பழிவாங்கல்கள் அதிகமாக இடம்பெறவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பது 40 வருடங்களுக்கு முன்பு முன்வைக்கப்பட்ட சட்டமாகும். 40 வருடங்களுக்கு முன்பு எவ்வாறான நிலைமை நாட்டில் காணப்பட்டதோ அதற்கேற்றவாறே அந்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

அரசாங்கமானது கொண்டுவருவதற்கு

15

## யாழில் தேநீர், ரொட்டி ரூ. 10ஆல் குறையும்!

யாழ்ப்பாணம்,ஏப். 08

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் தேநீர், பால் தேநீர், ரொட்டி (பரோட்டா) என்பவற்றின் விலைகள் 10 ரூபாயால் குறைக்கப்படும் என்று உணவக உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நேற்று மாலை

15

## யாழ்.- கொழும்பு ரயில் சேவை ஜனவரியிலேயே மீள ஆரம்பம்

கொழும்பு, ஏப். 08

கொழும்பு கோட்டையில் இருந்து யாழ்ப்பாணம் - காங்கேசன்துறைக்கான நேரடி ரயில் சேவை 2024 ஆண்டு ஜனவரியிலேயே மீள ஆரம்பிக்கப்படும் என ரயில்வே பிரதி பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொலகே தெரிவித்தார்.

வடக்கு ரயில் மார்க்கத்தின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற திருத்தப்பணிகளால், ஜனவரி 5 ஆம் திகதி முதல் கொழும்பு கோட்டை - காங்கேசன் துறைக்கு இடையிலான நேரடி ரயில் சேவை

15

## இரண்டு மாதங்களுக்குள் மருந்து தட்டுப்பாடு நீங்கும்

கூறுகிறார் சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஏப். 08

எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் மருந்து தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்வதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கண்டி-பல்லேகலையில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை கூறினார்.

அத்துடன், நியாயமான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்யும் நடவடிக்கைக்கும் செல்ல வேண்டும்.

15

## கட்டணம் உயர்த்தப்பட்டாலும் மின் பாவனை குறையவில்லை

கொழும்பு, ஏப். 08

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்ட போதிலும் மின் பாவனையில் குறைவில்லை என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் சிஸ்டம் கட்டுப்பாட்டு அலகின் தரவு விளக்கப்படத்தை முன் வைத்த அவர், மார்ச் மாதத்திற்கான சராசரி மின்சார உற்பத்தி 44.22 ஜிகாவாட் மணிநேரம் என சுட்டிக்காட்டினார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்பினால் எரிசக்தி தேவை

15

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## ஜனாதிபதி...

பேசவுள்ளார் என்று அறிய வருகின்றது.

டிலித் ஜெயவீர சிங்களம், ஆங்கிலம், தமிழ் மொழிகளில் பத்திரிகைகள், இணையத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி அலைவரிசையையும் நடத்தி வருகின்றார். கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அதி செல்வாக்குமிக்கவராக இருந்த இவர், கிழக்கு தொல்பொருள் செயலணியின் உறுப்பினராகவும் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஐக்கிய...

ஐக்கிய மக்கள் சக்திக்குள் ரணில் விக்கிரமசிங்கவின் குடும்பத்துக்கு சொந்தமான அந்த ஆங்கில நாளிதழே குழப்பங்களை ஏற்படுத்த முயல்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

மேலும், கடந்த 3ஆம் திகதி சஜித் பிரேமாஸ இரவு விருந்து ஒன்றை நடத்தியிருந்தார். அந்த விருந்தின்போது கட்சியினரை தொடர்ந்தும் தம்முடன் பயணிக்குமாறு கேட்டிருந்தார் என்றும் இந்நிலையில், சரத் பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையை குறிவைத்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேசமயம், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான பாட்டலி சம்பிக்க ரணவக்க அடுத்த மாதம் புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எம்மிடம்...

பணத்தைக் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை அரசுக்கு கிடையாது என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் என்பது பயங்கரவாதத்துக்கு எதிரானதே தவிர, மக்களுக்கு எதிரானதல்ல. எனவே எதிர்க்கட்சியினர் கூறுவதைப் போன்று மக்கள் இது குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை.

காலத்திற்கு தேவையான புதிய விடயங்களை அறிமுகப்படுத்தும் போது, அவற்றில் குறை காண்பவர்கள் தற்போதும் அதனையே செய்து கொண்டிருக்கின்றனர்.

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் முறையான சட்ட கட்டமைப்பு அவசியமாகும். அதற்கான நடவடிக்கைகளையே அரசாங்கம் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றது.

அதற்கமைய புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கமைய பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படுமே தவிர , மக்களுக்கு எவ்வித துன்புறுத்தல்களும் ஏற்படுத்தப்படமாட்டாது.

அரசாங்கத்திடம் தற்போது ஆட்சியை முன்னெடுத்துச் செல்வதற்கான பெரும்பான்மை பலம் காணப்படுகிறது. எதிர்க்கட்சியினர் இணையவில்லை என்பதற்காக அரசாங்கம் வீழ்ச்சியடைப் போவதில்லை.

அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் நடவடிக்கைகள் வெற்றிகரமானவை என எண்ணினால் , விரும்பும் எவரும் எம்முடன் இணையலாம்.

அரசாங்கத்துடன் இணைய விரும்புபவர்களை அச்சுறுத்துவதற்காகவே அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாகக் கூறுகின்றனர்.

அவ்வாறு பணத்தைக் கொடுத்து பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளவேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது.

அரசாங்கம் அரசியல் விவகாரங்களுக்கு முன்னுரிமையளிக்கவில்லை. மாறாக நாட்டின் முன்னேற்றம் குறித்தே அவதானம் செலுத்தியுள்ளது. எனவே அமைச்சரவை மாற்றங்கள் எவையும் இடம்பெறாது - என்றார். (அ)

## யாழ்...

அநுராதபுரம் ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டது.

எனினும், வவுனியா முதல் காங்கேசன்துறை வரையிலான யாழ். ராணி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், மார்ச் 27 ஆம் திகதி முதல் அது ஓமந்தை வரைக்கும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் முன்னெடுக்கப்படும் திருத்தப் பணிகள் நிறைவு பெற்றதன் பின்னர் அநுராதபுரம் முதல் காங்கேசன்துறை வரையிலான ரயில் சேவை ஜூலை மாதமளவில் முன்னெடுக்கப்படும் என ரயில்வே பிரதி பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

எனினும், அநுராதபுரத்தில் இருந்து மஹவ சந்தி வரையிலான ரயில் மார்க்கத்தில் மற்றுமொரு திருத்தப்பணி ஜூலை மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை முன்னெடுக்கப்படவுள்ளதால், ஜனவரி மாதத்திலேயே கொழும்பு கோட்டை- காங்கேசன்துறை நேரடி ரயில் சேவை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என ரயில்வே பிரதிப் பொது முகாமையாளர் சுட்டிக்காட்டினார். (அ)

## அரசியல்

முயற்சிக்கின்ற உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு நாம் ஏன் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம் என்பது தொடர்பில் தெளிவுப்படுத்த வேண்டியுள்ளது. எதற்காக இந்த சட்டமூலம் கொண்டுவரப்படுகின்றது என்பதை இந்த அரசாங்கம் தற்போது தெளிவுபடுத்தியுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் என்பது 40 வருடங்களுக்கு முன்பு முன்வைக்கப்பட்ட சட்டமாகும். 40 வருடங்களுக்கு முன்பு எவ்வாறான நிலைமை நாட்டில் காணப்பட்டதோ அதற்கேற்றவாறே அந்த சட்டம் கொண்டுவரப்பட்டது.

இந்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டமை தொடர்பில் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்புகள் காணப்படுகின்றன.

அரசியல் பழிவாங்களுக்காகவும் அரசியல் நோக்கங்களை செயற்படுத்திக் கொள்ளவுமே பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

இந்த குற்றச்சாட்டிலிருந்து அரசாங்கத்தால் விலகிக்கொள்ள முடியாது.

இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தி இதுவரையான அரசாங்கங்கள் எவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன என்பதை யாரும் மறந்துவிட மாட்டார்கள்.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நீக்குமாறு சர்வதேச சமூகமே அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் அரசாங்கமானது புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டுவருவதற்கு முயற்சிக்கின்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கும் அப்பால் சென்று மக்களுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான நடவடிக்கைகளிலேயே அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்திலுள்ள சரத்துக்களை அவதானிக்கும்போது அரசாங்கத்துக்கு எதிராக போராட்டம் செய்வது, தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபடுவது என்பன பாரிய குற்றங்களாக கருதப்படுகின்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் ரீதியிலான உரிமைகளுக்கு என்ன ஆகும்.

அதுமட்டுமல்லாது மக்களது அடிப்படை உரிமைகளுக்கு என்ன நடக்கும். மக்களது உரிமைகளை நசுக்கும் வகையிலேயே இந்த சட்டம் அமையவுள்ளது.

தடுத்து வைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் என்பது மிகவும் பயங்கரமானதாகக் காணப்படுகின்றது.

பிரதி பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய தடுத்து வைப்பதற்கான அதிகாரத்தை இந்த சட்டமூலத்தினூடாக உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதற்கூடாக நிச்சயம் அரசியல் பழிவாங்கல் அரங்கேறும்-என்றார். (அ-கே)

# பொருளாதாரம் ஸ்திரமடைந்த பின்பே அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை

## செஹான் சேமசிங்க திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 08

“பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அரசியல் காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கமுடியாது. பொருளாதாரம் ஸ்திரமடைந்த பின்னர் அரசியல் காரணிகளில் கட்சி என்ற ரீதியில் அவதானம் செலுத்துவோம்.”

- இவ்வாறு தெரிவித்தார் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்திட்ட நடவடிக்கைகளை சர்வதேச நிதி நிறுவனங்கள் வரவேற்றுள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டின் இரண்டாம் காலத்திற்குள் பொருளாதார வளர்ச்சி முன்னெற்றமடையும்.

சகலருக்கும் நிவாரணம் வழங்கும் செயற்திட்டத்துக்கு 38 இலட்ச குடும்பங்களில் இருந்து விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த விண்ணப்பங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதா என்பது பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக பரிசீலனை செய்யப்படுகிறது.

1994 ஆம் ஆண்டு முதல் சமுர்த்தி கொடுப்பனவுகள் சுமார் 17 இலட்சம் பயனாளர்களுக்கு வழங்கப்படுகிறது. சமுர்த்தி பயனாளர்களில் 50 சதவீதமானோர் அரசாங்கத்திடமிருந்து நிவாரணம் பெறுவதற்கு தகுதியற்றவர்களாக உள்ளார்கள். பொய்யான தகவல்களை முன்னிலைப்படுத்தி சமுர்த்தி நிவாரணம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமுர்த்தி பயனாளர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு உலக வங்கி ஆலோசனை வழங்கியுள்ளது.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் நிவாரண தொகை தொடர்பில் விசேட கண்காணிப்பு நடவடிக்கை நிதியமைச்சு ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் எடுத்த தீர்மானங்கள் வெற்றி பெற்றுள்ளன. பணவீக்கம் கட்டம் கட்டமாக குறைவடைகிறது. அடுத்த ஆண்டு முதல் காலாண்டுக்குள் உணவு பணவீக்கத்தை ஒற்றை இலக்கத்துக்கு நிலைப்படுத்துவவோம்-என்றார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் கைவிடவில்லை!

## ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஏப். 08

எதிர்க்கட்சிகள் , சிவில் சமூக அமைப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளால் புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை அரசாங்கம் சற்று ஒத்தி வைத்துள்ளதே தவிர, அதனை நிறைவேற்றும் முயற்சிகளை கைவிடவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

கட்சித் தலைமையகத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு பல்வேறு தரப்பினரால் கடுமையான எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளமையால் அரசாங்கம் அதனை சற்று ஒத்தி வைத்துள்ளதே தவிர , அதனை நிறைவேற்றும் முயற்சியைக் கைவிடவில்லை.

அரசியல் கட்சிகள் , சிவில் சமூக அமைப்புக்கள் , தொழிற்சங்கங்கள் உள்ளிட்டவற்றை தடை செய்வதே இதன் நோக்கமாகும். இதன் ஊடாக அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்கள் பயங்கரவாதிகளாகவே அடையாளப்படுத்தப்படுவர்.

உண்மையில் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதெனில் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை.

மாறாக நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு கொண்டு சென்ற அஜித் நிவாட் கப்ரால் போன்றவர்களுக்கு எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு பதிலாக , அவர்களுக்கு உயர் அங்கீகாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. - என்றார். (ஐ)

## யாழில்...

உணவக உரிமையாளர்கள் சங்கத்தினர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித் தனர்.

ஒவ்வொரு உணவு நிலையத்தி லும் தேநீர், பால் தேநீர், ரொட்டி (பரோட்டா) விலைகள் வேறுபடு கின்றன. இதனால், முன்னைய விலையிலிருந்து 10 ரூபாய் குறைத்து விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், புதுவருடத்துக்கு பின்னர் உணவுப்பொதிகள், வேறு உணவுப் பண்டங்கள் தொடர் பான விலைகள் குறித்து முடிவு எடுக் கப்படும் என்றும் அவர்கள் தெரி வித்தனர். (ஐ)

## ஆபத்தான...

நாட்களாக உணவு அல்லது தண்ணீரின்றி கடலில் நான்கு நாட்கள் கழித்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களில் ஒருவர் கடுமையான நீரிழப்பு காரணமாக மயங்கி விழுந்து ஹெலிகொப்டர் மூலம் மோல்டாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

மீடகப்பட்ட புலம்பெயர்ந்தவர்களில் இலங்கையர் உட்பட சிரியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், எகிப்து, சோமாலியா நாடுகளைச் சேர்ந்தவர்கள் உள்ளனர் என்று தெரிய வருகின்றது.(ஐ)

## இரண்டு...

இதேவேளை, மக்களை அசௌகரியத் துக்கு உள்ளாக்கி, அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற செயற்படும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த, 90 சதவீத மானோர் ஒத்துழைப்பு வழங்குவதை, சமூக ஊடகங்கள் வாயிலாக தாம் பார்ப்பதாக சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார். (அ)

## கட்டணம்...

குறையும் பட்சத்தில் சராசரி மின் உற்பத்தி 40.5 ஜிகாவாட் மணிநேரமாக குறையும் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

இதன்படி, ஊடகங்கள் ஊகித்து வருவதற்கு மாறாக மின்சாரத் தேவைக்கு எவ்வித தட்டுப்பாடும் ஏற்படவில்லை என அமைச்சர் தனது ருவிட்டரில் மேலும் கூறினார். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீளப்பெறுவதை எழுத்தில் தருக!

## எதிர்க்கட்சி தலைவர் கோரிக்கை

கொழும்பு, ஏப். 08

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப்பெறுவதாகக் கூறும் அரசாங்கம், அதனை எழுத்தில் தர வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் எதிர்ப்பை கருத்தில் கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை மீளப்பெற முடிவு எடுக்கப்பட்டாலும் அந்த முடிவில் தனக்கு நம்பிக்கை இல்லை எனவும் இதற்கு முன்னரும் மக்களால் எதிர்க்கப்பட்ட சட்டமூலங்களை அரசாங்கம் மீளப்பெற்றாலும் பின்னர் தமது பெரும்பான்மையை பயன்படுத்தி நிறைவேற்றிக் கொண்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே, அரசாங்கம் இந்த பங்கரவாத சட்டத்தை வாபஸ் பெறுவதாக இருந்தால், அது தொடர்பில் தெளிவான எழுத்துமூல அறிவிப்பை வெளியிடவேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் - நாட்டின் அரசமைப்பு சட்டத்தால் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மனித உரிமைகள்கூட மீறப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் தொடர்பில் ஊடகங்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# கொழும்பு துறைமுக நகரம் தொடர்பான ஒப்பந்தத்தை வெளியிடுமாறு உத்தரவு

கொழும்பு, ஏப். 08

நீண்ட கால விசாரணையின் பின்னர், கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பான முத்தரப்பு ஒப்பந்தத்தை வெளியிடுமாறு முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சுக்கு தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

2017இல் கையெழுத்திடப்பட்ட இந்த முத்தரப்பு உடன்படிக்கை, பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சகம், நகர்ப்புற மேம்பாட்டு ஆணையகம் மற்றும் சீன துறைமுக பொறியியல் நிறுவனம் (CHEC), ஆகியவற்றுக்கு இடையே செய்துக்கொள்ளப்பட்டது.

2018ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல் நீதிக்கான மையம் இந்த ஒப்பந்தத்தின் நகலை பெருநகர் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சகத்திடம் கோரியிருந்தது.

எனினும், இரகசிய உட்பிரிவுகள் இருப்பதால் அந்த கோரிக்கை மறுக்கப்பட்டது. இதனையடுத்து தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு, தகவல் அறியும் உரிமை ஆணையகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எனினும், நான்கு ஆண்டுகள் இது தொடர்பான விசாரணை நீடித்தது. இதுவே, ஆணையத்தின் வரலாற்றில் மிக நீண்டது.

இந்தநிலையில் இறுதி உத்தரவை பிறப்பித்த தகவல் அறியும் உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர்- கிஷாலி பின்டோ ஜயவர்த்தன, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சால் எந்த சரத்துக்கள் இரகசியமாக வைக்கப்பட வேண்டும் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

எனவே, ஆவணத்தை பொதுக் களத்துக்கு வெளியே வைத்திருப்பதன் அவசியம் ஏற்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# ஹெரோயின் கடத்தல் குற்றச்சாட்டு ஐவரை விடுதலை செய்தது நீதிமன்று

கொழும்பு, ஏப். 08

196 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளை இறக்குமதி செய்தமை மற்றும் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றம் சுமத்தப்பட்ட முன்னாள் போராளி உள்ளிட்ட 5 பேரையும் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற ட்ரயல் அட்-பார் உத்தரவிட்டுள்ளது.

ஆறு மாத குறுகிய காலப் பகுதியில் முடிக்கப்பட்ட இந்த வழக்கைத் தொடர்ந்து, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் நிரூபிக்க அரசாங்கத் தரப்பால் முடியவில்லை என கொழும்பு உயர் நீதிமன்ற ட்ரயல் அட்- பார் அவதானித்துள்ளது.

வழக்கு விசாரணையின் போது கிடைத்த சாட்சியங்களை கருத்தில் கொண்ட கொழும்பு உயர் நீதிமன்ற ட்ரயல் அட் பார், வழக்கு விசாரணையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய அரசு தரப்பு சாட்சியங்களில் முரண்பாடுகள் இருந்ததால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதிகளான ஆதித்ய படபெந்திகே, மஞ்சுள திலகரத்ன மற்றும் மகேஷ் வீரமன் ஆகியோர் அடங்கிய அமர்வு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

முன்னதாக, 198 கிலோ ஹெரோயின் இறக்குமதி மற்றும் வைத்திருந்த குற்றச்சாட்டில் சட்டமா அதிபரால் குற்றம் சாட்டப்பட்ட ஐந்து பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரிப்பதற்காக பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய கொழும்பு மேல் நீதிமன்றில் ட்ரயல் அட் பார் நியமித்திருந்தார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, 196 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்கு கொண்டு வந்த போது, கடலில் வைத்து கைது செய்யப்பட்ட ஐந்து குற்றவாளிகளுக்கு எதிரான வழக்கை விசாரிப்பதற்காக, பிரதம நீதியரசரால் விசேட ட்ரயல் அட் பார் பெஞ்ச் நியமிக்கப்பட்டது.

இந்த குழுவின் தலைமை நீதிபதியாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே நியமிக்கப்பட்டிருந்தார். மேல் நீதிமன்ற நீதிபதிகளான மஞ்சுள திலகரத்ண மற்றும் மகேன் வீரமன் ஆகியோர் நீதிபதிகள் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.

ஏப்ரல் 21, 2019 அன்று செனி. அன்ரனி என்ற மீன்பிடிக் கப்பலில் இருந்து 196.986 கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் பொதிகள் அடங்கிய 13 பைகளை கொண்டு வந்த போது குற்றம் சாட்டப்பட்டவர்கள் வடக்கு சர்வதேச பெருங்கடலில் கைது செய்யப்பட்டனர்.

ஹெரோயின் போதைப் பொருளை இலங்கைக்கு இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் அநுர சமிந்த அப்புஹாமி, தவராசா சுதாகரன், அகிலேசப்பிள்ளை தவராசா, லசந்த பிரியலால் அப்புஹாமி மற்றும் கந்தையா சந்திர குமார் ஆகிய 5 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம ஆஜரானதுடன், சட்டத்தரணிகளான காமினி அல்விஸ் மற்றும் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் சார்பில் முன்னிலையாகியிருந்தனர். (ஐ)

## இப்படியும் நடக்கிறது...!

உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக யாரும் இப்போது குரல் எழுப்புவதில்லை என்று நேற்று முன்தினம் இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன்.

ஜனாதிபதி தேர்தல்தான் முதலில் நடக்கும் என்று பரவலான எதிர்பார்ப்பு பலரிடமும் உண்டு. அதற்கான சாத்தியப்பாடுகள்தான் அதிகம் என்பதும் புரிந்துகொள்ளக் கூடியதே.

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான யுத்த வெற்றிக்குப் பின்னர், மகிந்த ராஜபக்ஷ மீது சிங்கள மக்களுக்கு ஏற்பட்டிருந்த 'பிடிப்பு' அவரே அடுத்த சில தசாப்தங்களுக்கு நாட்டை ஆள்வார் என்று நம்பப்பட்டது.

ஆனால், அவர்களின் தனிப்பட்ட நடவடிக்கையாலேயே இந்தக் கருத்து பொய்ப்பிக்கப்பட்டது என்பது வேறு சங்கதி.

குடும்ப உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்ட அதீத முக்கியத்துவம், ராஜபக்ஷ குழும்பத்தில் இருந்தவர்கள் ஓர் அரச குடும்பத்தினர்போல நடந்துகொண்டமை என்று அவர்களின் வீழ்ச்சிக்கு பின்னால் பல காரணங்கள் கூறப்படுகின்றன.

அன்று ராஜபக்ஷமீது இருந்த மக்கள் ஆதரவே எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒன்றிணைய வைத்தது. அதனால்தான் எதிரணிகள் இணைந்து ராஜபக்ஷக்களுக்கு எதிராக பொதுவேட்பாளரை களம் இறக்கினார்கள்.

அன்று யுத்தத்தை வெற்றி கொண்டபோது மகிந்த ராஜபக்ஷ மீதிருந்த மக்கள் ஆதரவு போன்று, இன்று 'பொருளாதார யுத்தத்தில்' வெற்றியடைந்த (அப்படி ஒரு தோற்றம் தான் நாட்டில் இருக்கிறது) ரணில்மீது திரும்பியிருக்கின்றது.

நாட்டில் இன்றுள்ள தலைவர்களில் ஜனாதிபதி பதவிக்கு ரணிலை விட்டால் யாரும் இல்லை என்ற நிலை. அதனால் ரணிலின் முகாமுக்கு வருவதற்காக எதிரணியிலிருந்து பலரும் தயாராகி வருகின்றனர் என்கின்றன கொழும்பு தகவல்கள்.

ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கிய தலைவர்கள் சிலர் ஏற்கனவே ரணிலுடன் சேர்வது என்பது உறுதியாகிவிட்டது. ராஜித சேனரத்ன பகிரங்க மாகவே சுகாதார அமைச்சை தந்தால் பொறுப்பேற்க தான் தயாராக இருப்பதாக அறிவித்து விட்டார். அவரோடு, சஜித் அணியிலுள்ள மிக முக்கிய தலைவர்கள் சிலர் அரசுடன் இணைவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ரணில், அவர்கள் ஒரு சிலரை மாத்திரம் சேர்த்துக் கொள்ளாமல், எதிர்கட்சி முகாமிலிருந்து ஒரு பெரிய 'பட்டாளத்தையே' பெயர்த்து எடுத்து அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க காய்களை நகர்த்தி வருகின்றார்.

அதனால்தான் ஏற்கனவே வருவதற்கு தயாராக இருப்பவர்களையும் அமைதிகாக்குமாறு கேட்டிருக்கிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது அணியிலிருந்து பலர் வெளியேறப்போவதைத் தெரிந்துகொண்ட பின்னர்தான், தமது கட்சியினருக்கு தலைக்கு இருநூறு மில்லியன் ரூபாய் பேரம் பேசப்படுவதாக சஜித் தரப்பு இப்போது சொல்லத் தொடங்கியிருக்கின்றது.

அப்படிச் சொல்வதன் மூலம் தமது கட்சியிலிருந்து அணி மாறுபவர்கள் எல்லோரும் பணத்திற்காகவே மாறினார்கள் என்று அவர்கள்மீது சேறடிப்பு செய்வதற்காகவும் அவர்கள் தமக்கு அப்படியொரு பெயர் வரப்போகின்றது என்ற எண்ணத்தில் தமது முடிவை மாற்றுவார்கள் என்ற எதிர்பார்ப்பும் சஜித் அணியினருக்கு இருக்கலாம்.

ஆனால், அவை எல்லாம் சாதாரண வாக்காளர் மத்தியில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை.

சஜித் அணிக்குள்தான் இப்படியொரு கயிறிழுப்பு நடக்கின்றது என்றால், அவர்கள் கட்சியில் பெருந்தொகையானவர்கள் ஒரேநாளில் வெளியேறினால், சஜித் அணியில் ஏற்படும் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்காக பொதுஜன பெரமுனவிலிருந்து வெளியேறி சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கும் அணியில் உள்ளவர்களோ, அந்த நேரத்தில் சஜித்துடன் தாம் சேர்ந்து விடுவதற்காக தூதுவிட்டுக் கொண்டிருக்கின்றனராம்.

எப்போதுமே தேசியப் பட்டியல் மூலமே பாராளுமன்றம் சென்று பழக்கப்பட்ட சிலர், தாம் தற்போது இருக்கும் அணியில் போட்டியிட்டால் தமது அணிக்கு ஒன்றோ இரண்டோ தேசியப்பட்டியல் ஆசனங்கள் கிடைத்தாலே ஆச்சரியம் என்பதால், சஜித் அணியுடன் சங்கமமானால் அவர்களுக்கு கிடைக்கும் தேசியப் பட்டியலில் தாம் எம்.பியாகிவிடலாம் என்ற எண்ணத்தில் சஜித்துடன் சேருவதற்காக காத்திருக்கின்றனராம்.

இப்போது யார் யாருடன் அணி சேருவது என்பதிலேயே குறியாக இருப்பதால், தெற்கு அரசியல் பரபரப்பாக இருக்கின்றது.

ஆனால், வடக்கு - கிழக்கில் வெடுக்குநாறி மலை விவகாரத்தை மறந்துவிட்டார்கள். இனி அடுத்தது என்ன என்ற எதிர்பார்ப்பில் காத்திருக்கிறார்கள்.!

- ஊர்க்குருவி

ஈழநாடு
Eelanadu
08.04.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஊழல்வாதிகளின் கவலை?

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், இலங்கையின் அனைத்து விடயங்களும் அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் இனி அனைத்தும் அவர்களாலேயே தீர்மானிக்கப்படுமென்றும் தெரிவித்திருக்கின்றார். கப்ரால் ராஜபக்ஷ குடும்பத்தின் விசுவாசி. அவர்களாலேயே ஆளுநராக நியமிக்கப்பட்டவர்.

ராஜபக்ஷ குடும்பத்தின் எதேச்சாதிகாரம் மற்றும் தவறான நிர்வாகத்தால்தான், நாட்டின் பொருளாதாரம் இந்தளவு மோசமான நிலைக்கு சென்றதாகவே பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட கிளர்ச்சியே ராஜபக்ஷ குடும்பத்தின் செல்வாக்கை சரித்தது. பொருளாதார நெருக்கடியே, 69 இலட்சம் சிங்கள மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி மாளிகையின் பின்கதவால் ஓடும் நிலைமையை ஏற்படுத்தியது.

இவ்வாறானதொரு நிலையில், நாட்டை கட்டியெழுப்பும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க படிப்படியாக முன்னேற்றங்களை காண்பித்து வருகின்றார். ரணில் பொறுப்பேற்றதைத் தொடர்ந்தே மக்கள் கிளர்ச்சி கட்டுக்குள் வந்தது. ஒருவேளை பிறிதொருவர் இந்தப் பொறுப்பை ஏற்றிருந்தால் நிலைமை மேலும் மோசமடைந்திருக்கும். ஒருவேளை, டலஸ் அழகப்பெரும ஜனாதிபதியாகியிருந்தால், கிளர்ச்சியாளர்கள் நாட்டை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருக்கலாம். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவமும் அவருக்கான சர்வதேச அங்கீகாரமும் கிளர்ச்சியின் மூலம் நாட்டைக் கைப்பற்ற முற்பட்ட சக்திகளை பின்னுக்குத் தள்ளியது.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிப் பெறுப்பை ஏற்றுக்கொண்ட பின்புலத்தில்தான் அமெரிக்க கதைகளை சிலர் முன்வைத்தனர். ரணில் விக்கிரமசிங்க அடிப்படையில் மேற்குலகு சார்பான அரசியல்வாதிதான். இதனை அவரின் ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றோடு இணைத்தே புரிந்துகொள்ள வேண்டும். ரணில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறும் முயற்சிகள் தீவிரமடைந்தன.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தவேளையிலும் நாணய நிதியத்தின் உதவியை பெற வேண்டுமென்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. ஆனால், கோட்டாபய அதற்கு இணங்கவில்லை. குறிப்பாக, கோட்டாபயவின் வியத்மக ஆலோசகர்கள் அதனை ஆதரிக்கவில்லை. பொருளாதார நெருக்கடி உச்சமடைந்தபோது மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவர்தான் கப்ரால். கப்ராலும் நாணய நிதியத்திடம் செல்லும் யோசனையை ஆதரிக்கவில்லை.

நாணய நிதியத்திடம் சென்றால் பிரச்னைகள் ஏற்படுமென்றே வாதிட்டார். என்ன பிரச்னை ஏற்படும்? ஊழல் செய்ய முடியாது. தாங்கள் நினைப்பது போன்று போலியான அறிக்கைகளை வெளியிட முடியாது. அனைத்தும் அவர்களின் மேற்பார்வைக்குள்தான் இருக்கும். இதன் காரணமாகவே நாணய நிதியத்தின் உதவியை பெறுவதை ராஜபக்ஷ அணியினர் எதிர்த்தனர்.

ரணில் வந்ததும் விடயங்கள் வேகமாக நடைபெற்றன. நாணய நிதியத்தின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டன. தற்போது நாடு முன்நோக்கி நகர்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான், விமல் வீரவன்ஸவும் உதய கம்மன்பிலவும் சி. ஐ. ஏ கதைகளைக் கூறினர். இப்போது அனைத்தையும் அமெரிக்கா கட்டுப்படுத்துவதாக கப்ரால் அழுகின்றார். அமெரிக்கா எதைக் கட்டுப்படுத்துகின்றது? அப்படி கட்டுப்படுத்துவதற்கு என்ன இருக்கின்றது?

இலங்கையை அமெரிக்கா சதா அவதானித்துக் கொண்டிருப்பதான ஒரு தோற்றத்தை சிலர் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இது அடிப்படையிலேயே தவறானதொரு பார்வை. அமெரிக்காவின் தெற்காசிய அணுகுமுறையில் ஓர் அங்கமாகவே இலங்கை நோக்கப்படுகின்றது. அமெரிக்காவின் தெற்காசிய அணுகுமுறை அடிப்படையில், இந்தியாவை அடிப்படையாகக் கொண்டது.

# யாழ்ப்பாணத்தில் பெரியவெள்ளி வழிபாட்டில் கத்தோலிக்க மக்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க மக்கள் நேற்று புனித பெரிய வெள்ளி வழிபாடு - கூட்டுத் திருப்பலியில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணத்தின் சகல தேவாலயங்களிலும் நேற்று கூட்டுத் திருப்பலிகள், விசேட ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன. பிரதான ஆராதனை நிகழ்வுகள் வரலாற்று சிறப்புமிக்க யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஒப்புக்கொடுத்தார்.

இந்தக் கூட்டுத் திருப்பலியில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் கத்தோலிக்க மக்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ)

# உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு 50 நாள்கள் தாமதம்!

கொழும்பு, ஏப். 08

கல்வி பொது தராதர உயர் தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்போது சுமார் 50 நாட்களாக தாமதடைந்துள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் முன்வராமையே இதற்கு காரணமெனத் திணைக்களம் கூறியுள்ளது.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் கலந்துகொள்வது தொடர்பில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இதுவரை தமக்கு அறிவிக்கவில்லை என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

மதிப்பீட்டு பணிகளுக்காக சுமார் 5,000 ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியமெனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில் க. பொ. த உயர்தர பரீட்சை மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைந்தமையால் சாதாரண தரப் பரீட்சையை திட்டமிட்ட தினத்தில் நடத்துவதிலும் சிக்கல் நிலைமை காணப்படுகிறது. (ஐ)

# நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 08

கொழும்பு பல்கலைக்கழக கல்விப் பீட விரிவுரையாளர் அ. பௌநந்தி எழுதிய 'வளர் நிலா' என்ற சிறுவர் பாடல் நூல் மற்றும் பெண் கவிஞர்கள் பற்றிய 'இன்னபடி முரண் நிலை' என்ற நூல் ஆகியவற்றின் வெளியீட்டு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி கோவில் கடவை சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை 'ஜீவநதி' ஆசிரியர் க பரணீதரனும் நூலின் மதிப்பீட்டுரைகளை விரிவுரையாளர் த. அஜந்தகுமார் மற்றும் விரிவுரையாளர் தி. செல்வமனோகரன் ஆகியோரும் நிகழ்த்துவர். (ஐ)

# நாட்டின் வருமானம் 78.5 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 08

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களால் கடந்த மாதத்தில் நாட்டுக்கு கிடைத்த வருமானம் 56.83 கோடி அமெரிக்க டொலர் வரையில் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் மார்ச் மாதத்தில் குறித்த வருமானம் 31.84 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டது. இதன்படி, மார்ச் மாதத்தில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களால் நாட்டுக்குக் கிடைத்த வருமானம் 78.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது.

# சூரிய மின்கலம் பொருத்தும் திட்டம் அடையாளமிடும் பணி 15இல் பூர்த்தி!

கொழும்பு, ஏப். 08


சூரிய மின்கலம் பொருத்தும் திட்டத்திற்கான அரச கட்டடங்கள் மற்றும் மத வழிப்பாட்டு தலங்களை அடையாளம் காணும் பணி எதிர்வரும் 15ஆம் திகதி நிறைவடையும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் 100 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் செயல்திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்கான கூட்டம் இடம்பெற்றபோதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார் .

தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பாடசாலைகள், ஆயுதப் படை கட்டடங்கள், பொலிஸ் நிலையங்கள், வழிபாட்டு தலங்கள் மற்றும் ஏனைய அரச கட்டிடங்கள் என்பன தொடர்பில் 90 வீதமான கணக்கெடுப்புகள் நிறைவடைந்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் வரும் 15 ஆம் திகதிக்குள் கணக்கெடுப்புப் பணிகள் நிறைவடையும் என்றும் இந்திய எக்ஸிம் வங்கியால் கேள்வி கோரல் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். உத்தியோக ஊழியர்கள் உதவுவார்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. எதிரிகளை வீழ்த்தும் வல்லமை உண்டாகும். அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். நிறைவு பெறும் நாள்.

**கடகம்**
வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். அலுவலகத்தில் அமைதி நிலவும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**சிம்மம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். வாகன வசதி பெருகும். வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் தலைமைக்கு நெருக்கமாவீர்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் இருந்த எதிர்பார்த்த பணம் வரும். அழகும் இளமையும் கூடும். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஆதரிப்பார். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே முயற்சியில் முடிக்க வேண்டிய விஷயங்களை பல முறை அலைந்து முடிப்பீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். உத்தியோகத்தில் கவனம் நல்லது.

**விருட்சிகம்**
எதையும் திட்டமிட்டு செய்யப்பாருங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**தனுசு**
உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**மகரம்**
குடும்ப கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வியாபாரத்தில் பத்திரங்கள் ஒப்பந்தம் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும்.

**கும்பம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் தொந்தரவு குறையும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் வரும். தடைப்பட்ட வேலைகள் முடியும் நாள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படாமல் இருங்கள். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு. பொறுமைத் தேவைப்படும் நாள்.

# மதச் சார்பற்ற கூட்டணி கட்சிகள் ஆளுநருக்கு எதிராக போராட்டம்!

சென்னை, ஏப். 08

சர்ச்சைக்குரிய கருத்துக்களை பொதுவெளியில் பேசிவரும் ஆளுநரைக் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி ஆளுநர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மதச் சார்பாற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில்,

"தமிழகத்துக்கு வந்தது முதல் ஆளுநர் ஆர். என். ரவியின் பேச்சுகள், செயல்பாடுகள், நடவடிக்கைகள் சர்ச்சைக்குரியதாகவும் மர்மமானதாகவும் இருக்கின்றன. அரசமைப்புச் சட்டம் அங்கீகரிக்கும் ஒரு மாநிலத்தின் ஆளுநராகப் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டவர் என்பதை மறந்து பா. ஜ. க. - ஆர். எஸ். எஸ். ஆகிய அமைப்புகளின் பிரதிநிதியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளத் துடிக்கிறார்.

அதிலும் குறிப்பாக சனாதனத்துக்கும் வர்ணாசிரமதர்ம முறைகளுக்கும் ஆதரவாக அவர் பொது மேடைகளில் எடுத்து வைத்த கருத்துக்கள் அபத்தமானவை. திராவிடம் என்ற சொல்லுக்கு எதிராக தினந்தோறும் தனது பாய்ச்சலைத் தொடர்ந்தார். திருக்குறளுக்கு தவறான பொருள் சொல்லி, திருக்குறளே தவறாக மொழிபெயர்க்கப்பட்டதாகச் சொல்லிக் கொண்டார். உலகப் பேராசான் கார்ல் மார்க்ஸின் தத்துவங்கள் இந்தியாவைப் பிளவுபடுத்துவதாகப் பிதற்றினார்.

ஆளுநர் பதவியே எந்த மாநிலத்துக்கும் அவசியமில்லாத பதவியாகும். தாங்கள் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் ஆளுநர்களை வைத்துக் கொண்டு இரட்டையாட்சி நடத்துவதற்கு பா. ஜ. க. நினைத்து, அவர்களை மகிழ்விக்க தினமும் ஏதாவது சர்ச்சைக்குரிய கருத்துக்களை பொதுவெளியில் உதிர்த்து வரும் ஆளுநரைக் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் எதிர்வரும் 12ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணியளவில், ஆளுநர் மாளிகை முன்பு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் - என்றுள்ளது.

# கருணாநிதிக்கு நினைவு சின்னம் கடற்கரை முகாமை குழு ஒப்புதல்

சென்னை, ஏப். 08

தி. மு. க. முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதிக்கு பேனா நினைவுச் சின்னம் அமைக்க தமிழ்நாடு கடற்கரை மண்டல மேலாண்மை ஆணையம் ஒப்புதல் அளித்துள்ளது.

மறைந்த முன்னாள் முதல்வர் கருணாநிதியின் எழுத்தாற்றலை நினைவுகூரும் வகையில், மெரீனா கடற்கரையில் உள்ள அவரின் நினைவிடத்தின் பின்புறம், வங்கக்கடலில் பேனா வடிவ நினைவுச் சின்னம் 81 கோடி (இந்திய) ரூபாயில் அமைக்க தமிழக அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து, கருத்து கேட்பு கூட்டம் மற்றும் பொதுப்பணித்துறை தயாரித்த சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை பரிசீலித்த, தமிழ்நாடு கடற்கரை மேலாண்மை மண்டல ஆணையம் இந்த திட்டத்துக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் மத்திய அரசின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுவுக்கு பரிந்துரை செய்துள்ளது.

(ஐ)

# இன்று சென்னை வருகிறார் பிரதமர்; காங்கிரஸ் கறுப்பு கொடி போராட்டம்!

சென்னை, ஏப். 08

சென்னை வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தமிழக காங்கிரஸ் குழு அறிவித்துள்ளது.

இன்று மாலை 3 மணியளவில் சென்னை வரும் பிரதமர் மோடி, சென்னை விமான நிலையத்தில் 1,260 கோடி (இந்திய) ரூபாயில் அமைக்கப்பட்டுள்ள புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடத்தை திறந்துவைக்கிறார். தொடர்ந்து பல நிகழ்ச்சிகளிலும் அவர் பங்கேற்கவுள்ளார்.



இந்நிலையில், சென்னை வரும் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக் கொடி ஏந்தி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தமிழக காங்கிரஸ் குழு அறிவித்துள்ளது. இது குறித்து சட்டமன்ற காங்கிரஸ் குழுத்தலைவர் செல்வப்பெருந்தகை தனது ருவிற்றர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"ராகுல் காந்தியின் பதவியை இழக்கச் செய்த, அரசியல் ரீதியாக அவரை எதிர்கொள்ள முடியாத, இந்திய ஜனநாயகத்தை சிதைத்த பிரதமர் மோடியின் தமிழகம் வருகையை கண்டித்து அவர் செல்லும் அனைத்து இடங்களிலும் கருப்புக் கொடி ஏந்தி காங்கிரஸ் கட்சி தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்." - என்று பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# தமிழரை சீண்டும் வேலையை ஆளுநர் நிறுத்த வேண்டும்!

## நாம் தமிழர் சீமான் எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 08

தமிழர்களை சீண்டிப் பார்க்கும் வேலையை இத்தோடு ஆளுநர் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று சீமான் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாடுகளிலிருந்து பணத்தைப் பெற்று, மக்களைத் தூண்டிவிட்டு வெஸ்டெர்லைட் தாமிர ஆலையை மூட வைத்துள்ளதாக தமிழ்நாட்டின் ஆளுநர் ஆர்.என்.ரவி



பேசியிருப்பது அதிர்ச்சியளிக்கிறது.

அதிகாரத் திமிரில் துளியும் பொறுப்புணர்வின்றி, குடிமைப்பணி மாணவர்கள் மத்தியில் நச்சுக்கருத்தை உமிழ்ந்து, தன்னெழுச்சியான மக்கள் போராட்டத்தை இழிவுபடுத்திப் பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

போர்க்குணத்தையும், போராட்ட உணர்வையும் மரபியல் குணங்களாக வாய்க்கப்பெற்ற தொல் தேசிய இனத்தின் மக்களான தமிழர்களை பணத்தை வாங்கிக்கொண்டு போராடுவதாகக் கொச்சைப் படுத்தியிருப்பது அபத்தத்தின் உச்சமாகும். இதனை வன்மையாக எதிர்க்கிறேன் - என்றுள்ளது.

(ஐ)

# தொழிற்சங்கச் செயல்பாட்டாளர்களை பயங்கரவாதிகளாக சித்திரிக்க முயற்சி!

## அரசைச் சாடுகின்றார் ஜோசப் ஸ்டாலின்



கொழும்பு, ஏப். 08

**அரசாங்கம் தற்போது பயங்கரவாதம் என்றால் என்ன என்பதை வரையறுக்க முயற்சிப்பதாகவும், தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களைப் பயங்கரவாதிகள் என பெயரிட்டுள்ளதாகவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- அரசாங்கம் ஏற்கனவே தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கரவாதம், தென்னிலங்கை இளைஞர்களுக்கு எதிரான பயங்கரவாதம், முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான பயங்கரவாதம், தற்போது தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்களையும் பயங்கரவாதிகள் என்று பெயரிட்டுள்ளது.

எனவே, பயங்கரவாதத்தை வரையறுக்கும் அதிகாரம் எப்படி கிடைத்தது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங்கத்திடம் கேட்கிறது.

ரணில் விக்கிரமசிங்க ஆணை இன்றி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். பயங்கரவாதத்தை வரையறுக்க அவருக்கு அதிகாரம் இல்லை.

அரகலய மற்றும் மக்களின் எழுச்சிகள் ஜனாதிபதியால் பயங்கரவாதம் என்று வரையறுக்கப்படுகிறது. இது அரசாங்கத்தின் உண்மையான நகைச்சுவையாகும்.

நாட்டில் உழைக்கும் சமூகம் முன்னோக்கி வருகிறது; அவர்கள்தான் ஒழுங்கமைப்பவர்கள், அவர்கள் சம்பளம் கேட்கும் மக்கள்.

இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை கொண்டு வருவதற்கு முதலில் இருந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம். எதிர்காலத்திலும் எதிர்ப்போம், சட்டரீதியாக இந்த சட்டமூலத்தை தோற்கடிக்கவேண்டும்- என்றார். (அ)



# அலரி மாளிகை முன்பாக கவிழ்ந்தது சொகுசு கார்!

கொழும்பு, ஏப். 08

கொள்ளுப்பிட்டி அலரி மாளிகை முன்றலில் சொகுசு கார் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

கார் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் கார் சேதமடைந்துள்ளதாகவும், ஆனால் அதில் பயணித்த ஆணுக்கும், பெண்ணுக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை என்றும் பொலிசார் கூறினர்.

இதேவேளை விபத்து தொடர்பில் காரின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கொள்ளுப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கடும் காற்றினால் மரங்கள் முறிந்தன!

கொழும்பு, ஏப். 08

வரக்காபொல, போபிட்டிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் வீசிய பலத்த காற்றினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஒரு வீட்டின் மேற்கூரை காற்றினால் அடித்துச் செல்லப்பட்டதுடன், பெரிய மரம் முறிந்து வீழ்ந்ததில் ஒரு வாகனமும் சேதமடைந்துள்ளது.

சிறு குழந்தை ஒன்றும் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காற்றினால் மின் கம்பங்கள் சேதமடைந்துள்ளதுடன், அப்பகுதியில் மின்சார விநியோகமும் துண்டிக்கப்பட்டது. (அ)

# ஐ.ஓ.சி. நிறுவனத்தின் 26 எரிபொருள் நிலையங்களுக்கு விநியோகம் நிறுத்தம்

கொழும்பு, ஏப். 08

லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் 26 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகத்தை இடைநிறுத்தியுள்ளது.

26 நிரப்பு நிலையங்கள் கியூ. ஆர் ஒதுக்கீடு விதிமுறைகளுக்கு இணங்கத் தவறியதால் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தொடர்ச்சியாக கியூ. ஆர் ஒதுக்கீடுகளை கடைப்பிடிக்கவில்லை என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார். (அ)

# அபிவிருத்தி கொள்கை செயல்பாட்டுத்திட்ட முன்னேற்றங்களுக்கு உலக வங்கி பாராட்டு

கொழும்பு, ஏப். 08

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றங்களுக்கு உலக வங்கி பிரதிநிதிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் உலக வங்கி பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற இறுதிச் சுற்று பேச்சுவார்த்தை, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றபோதே உலக வங்கிப் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு பாராட்டு தெரிவித்தனர்.

பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட அலுவலகத்தை நிறுவுதல், அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்தல், நலன்புரி கொடுப்பனவுகளை வழங்கும் முறைமை, சமூகப் பதிவு போன்ற இலங்கையின் அபிவிருத்தி கொள்கைக்கான செயற்பாட்டுத் திட்டத்தை முழுமையாக்குவதற்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கு அவசியமான கால எல்லை என்பன தொடர்பில் இங்கு விரிவாக ஆராயப்பட்டது.



இதன்போது இலங்கையின் அபிவிருத்தி கொள்கை முன்னெடுப்புக்களுக்கு உலக வங்கி வழங்கும் ஒத்துழைப்புக்கு பாராட்டுத் தெரிவித்த சாகல ரத்நாயக்க, இந்த வேலைத்திட்டத்தை சாத்தியமாக்கிக் கொள்வதற்கு அனைவரினதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளர் சியோ கன்தா உள்ளிட்ட உலக வங்கி பிரிதிநிதிகளும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க உள்ளிட்ட அதிகாரிகளும் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். (அ)

# இந்திய கடனுதவியின் கீழ் பதிவு செய்யாத நிறுவனங்களின் மூலம் மருந்து இறக்குமதி

## உயர்நீதிமன்றம் விசாரணைக்கு தீர்மானம்

கொழும்பு, ஏப். 08

இந்திய கடன் உதவித் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாத இரண்டு நிறுவனங்களிடம் இருந்து மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானம் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாக தீர்ப்பளிக்கக் கோரி ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நஷனல் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது.

முர்து பெர்னாண்டோ, யசந்த கோதாகொட மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் இருப்பு தொடர்பான ஆவணங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையத்திடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும், அங்கு முறையான தரம் உள்ளதா என உறுதி செய்யப்பட்டால் மட்டுமே அவற்றை வெளியிட முடியும் என்றும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மேலும், தரம் குறித்து தேவையான உறுதிப்படுத்தல் செய்யப்படும் வரை, இறக்குமதி செய்யப்படும் மருந்து இருப்புகளை மேலும் இறக்குமதி செய்வதைத் தடுக்கும் மற்றொரு உத்தரவை உயர் நீதிமன்றம் பிறப்பித்தது.



அதன்பிறகு, மனு மீதான விசாரணையை ஒக்டோபர் 18ஆம் திகதிக்கு நீதிமன்றம் நிர்ணயித்தது.

அந்த மனுவில் பிரதிவாதிகளாக சுகாதார அமைச்சர் மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள், தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையம், இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் விசாரணை ஆணைக்குழு, சுங்கப் பணிப்பாளர் நாயகம், பொலிஸ்மா அதிபர், சாவோரைட் பார்மாசூட்டிகல்ஸ் பிரைவேட் லிமிடெட், கௌசிக் தெரபியூட்டிக்ஸ் தனியார் நிறுவனம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

# யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 'சிறைச்சாலை நூலகம்' திறப்பு

யாழ்ப்பாணம், ஏப். 08

"ஒரு நூலகம் திறக்கப்படும் பொழுது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன" எனும் கூற்றுக்கு அமைய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கைதிகளின் பாவனைக்கென நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகம் இன்று சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது கற்றல் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்கு அப்பால் தான் சார்ந்த சமூகத்தின் மேம்பாட்டுக்காகச் சமூகப் பொறுப்பாண்மை மற்றும் சமூக வலுவூட்டல் செயற்பாடுகளில் அண்மைக் காலமாக ஈடுபட்டு வருகின்றது.

பல்கலைக் கழகத்தின் பால்நிலை சமத்துவம் மற்றும் ஒப்புரவுக்கான நிலையம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

அதேபோலவே, பல்கலைக் கழகத்தின் சமூகப் பொறுப்பாண்மையின் ஒரு அம்சமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் தனது சமூக வலுவூட்டல் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் நூலக நியமங்களுக்கு ஏற்றவாறான நூலகமொன்றை ஒழுங்கமைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

அம்முயற்சியின் முதல்படியாக ஏறத்தாழ 2500 புத்தகங்களை கொண்ட நூலகம் ஒன்று அமைக்கப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நூலகம் தொடர்ச்சியாக இயங்குவதற்கான முழுமையான பங்களிப்பையும், பராமரிப்பு, ஆலோசனைகளையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம் வழங்கவுள்ளது. (அ)

# புதிதாக அடக்குமுறைச் சட்டத்தை கொண்டு வருகிறது இலங்கை அரசு

## தூதரகங்களுக்கு சிவில் சமூக ஒன்றியம் மனு

கொழும்பு, ஏப். 08

**நாட்டில் உள்ள தூதரகங்கள் சிலவற்றுக்கு சிவில் சமூக ஒன்றியம் 8 விடயங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை கையளித்துள்ளது.**

தற்போதைய அரசாங்கம் மக்களின் ஜனநாயக உரிமைகளை இல்லாமலாக்கி, புதிய அடக்குமுறைச் சட்டத்தைக் கொண்டு வருவதை தடுக்குமாறு கோரி இந்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு சுவிற்சர்லாந்து தூதரகத்துக்கு சென்ற குறித்த தரப்பினர், தூதரக அலுவலக அதிகாரியிடம் தமது மனுவைக் கையளித்தனர்.

பின்னர் அவர்கள் அவுஸ்திரேலிய தூதரகத்துக்குச் சென்று பிரதி தூதுவரிடம் மனுவைக் கையளித்ததுடன், கொழும்பிலுள்ள பாலஸ்தீன், மாலைதீவு மற்றும் ஐரோப்பிய ஒன்றிய தூதரக அலுவலகங்களிலும் மனுவை வழங்கினர்.

ரஷ்ய தூதரக அலுவலகத்துக்கும் சிவில் சமூக ஒன்றியம் 8 விடயங்கள் அடங்கிய மனுவைக் கையளித்துள்ளது.

நெதர்லாந்து தூதரகத்துக்கும் சென்று மனு வழங்கப்பட்டதுடன், கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் அலுவலகத்திற்கு முன்பாக சென்று அமைதியான முறையில் எதிர்ப்பிலும் ஈடுபட்டனர்.

# யாழில் வெப்பநிலை உயரும்!

யாழ்ப்பாணம், ஏப். 08

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு பின்னர் சூரியன் உச்சம் கொடுக்க உள்ள நிலையில் வெப்பநிலை 35 பாகையை தாண்டும் என யாழ். பிராந்திய வளிமண்டலத் திணைக்களப் பெறுப்பதிகாரி தர்மலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- அவர் மேலும் தெரிவிக்கையில், சூரியன் வட துருவ நோக்கிய பாதையில் கடந்த 5ஆம் திகதி இலங்கையின் தெற்கு பகுதியான அம்பாந்தோட்டைப் பகுதியில் உச்சம் கொடுத்த நிலையில் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு பின்னர் யாழ்.மாவட்டத்துக்கு உச்சம் கொடுக்க உள்ளது.

தற்போது யாழ்.மாவட்டத்தின் வெப்பநிலை 34 பாகையை தாண்டியுள்ள நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு பின்னர் 35 பாகையை தாண்டும்.

இவ்வாறான நேரங்களில் யாழ். மாவட்டத்தில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்வதுடன் இடி மின்னல் தாக்கங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உச்சம் கொடுக்கும் சூரியன் எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை கடுமையான வெப்பம் நிலவுகின்ற நிலையில் எதிர்வரும் மே மாதம் முதல் திகதி வரை வெப்பநிலை தொடரக் கூடிய சாத்தியங்கள் உண்டு - என்றார். (அ)

# காஞ்சன விஜேசேகரவிடம் சி.ஐ.டி வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஏப். 08

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட நாளில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் பாராளுமன்றத் தில் வைத்து அமைச்சரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக சம்பவத்தின் சாட்சியாளர்களிடமும் வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

எரிபொருள் பவுசர்கள் புறப்படுவதற்கு சந்தர்ப்பத்தை வழங்காமை, விமான நிலையங்களுக்கான எரிபொருள் விநியோகத்திற்கு தடை ஏற்படுத்தியமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதனூடாக விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அமைச்சர் காஞ்சன விஜேசேகரவினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக இந்த விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

எரிபொருள் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு 03 தனியார் நிறுவனங்களுக்கு அனுமதியளிப்பதாக தெரிவித்து பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் கடந்த நாட்களில் பகிஷ்கரிப்பை முன்னெடுத்ததுடன், சுமார் 20 ஊழியர்களுக்கு கட்டாய விடுமுறை வழங்கப்பட்டது. (அ)

# சஜித் அணியிலுள்ள 50 எம்.பிக்கள் ரணில் அரசுடன் இணையத் தயார்!

## ஐ.தே.க. தவிசாளர் பரபரப்பு தகவல்

கொழும்பு, ஏப். 08

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியிலிருந்து 50 இற்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துடன் இணைய எந்நேரமும் தயாராகவுள்ளனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஊடக சந்திப்பொன்றில் வைத்து அவர் இந்த விடயத்தைக் கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்- ரணிலின் சிறந்த ஆட்சியாலும் நாட்டு மக்கள் மீதான அக்கறையாலுமே அவர்கள் அரசாங்கத்துடன் இணையத் தயாராகியுள்ளனர்.

அரசாங்கத்துடன் இணையவுள்ள எம்.பிக்கள் அரசாங்கத்துடன் இணையவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலானோர் எம்முடன் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்கள் எப்போது அரசாங்கத்துடன் இணைவார்கள் என்று தெரியாது.

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்களாவர்.

எனவே, தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் குறித்த உறுப்பினர்களை வலைவீசி எடுக்கும் தேவை ரணிலுக்குக் கிடையாது. அவர்கள் தாமாகவே ரணிலுடன் இணைவார்கள்.

எனினும், தற்போதைய நிலைமையில் கட்சி அரசியலை நான் பேச விரும்பவில்லை. அதற்கான நேரம் இதுவல்ல.

மக்கள் நலன் என்ற ரீதியில் அரசாங்கத்துடன் நாம் அனைவரும் ஓரணியில் செயற்பட வேண்டும். அப்போதுதான் நாடு மீளெழுச்சி பெறும்-என்றார். (அ)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் அடிப்படை உரிமைகளை அச்சுறுத்துகிறது

## மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி

கொழும்பு, ஏப். 08

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பொது மக்களின் அடிப்படை உரிமைகளை அச்சு றுத்தும் வகையில் இருப்பதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

புதிதாக முன்மொழியப்பட்ட யோசனையில் 'பயங்கரவாதம்' என்ற வார்த்தைக்கு வழங்கப்பட்டுள்ள பரந்த வரையறையின் மூலம், இது மக்களின் அடிப் படை உரிமைகளை மீறும் சாத்தியம் உள்ளது என்று ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் பொது, சமூக ஆர்வலர்களின் கோரிக்கை களை கருத்திற்கொண்டு பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பயன்படுத்தி அரசு சிறுபான்மையினரை இலக்குவைக்கலாம்

## சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

கொழும்பு, ஏப். 08

இலங்கை அரசாங்கத்தின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அடிப்படை உரிமைகளைத் திட்டமிட்ட முறையில் மீறுவதற்கான வலுவை அதிகாரிகளுக்கு வழங்கும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் சட்டமூலத்தை விலக்கிக்கொள்ளவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் எந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் சர்வதேச தராதரங்களை பேணுவதை கலந்தாய்வு மூலம் இலங்கை அரசாங்கம் உறுதி செய்யவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தற்போதைய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கண்டனங்கள்எழுந்ததைத்தொடர்ந்து அரசாங்கம் முன்னேற்றகரமான சட்டத்தை கொண்டுவருவதாக உறுதியளித்தது. ஆனால் இந்த பிரச்னைக்கு தீர்வை காண்பதற்கு பதில், உத்தேச பயங்கரவாத தடைச்சட்டமூலம் பயங்கரவாதம் குறித்த வரைவிலக்கணத்தை அதிகரித்துள்ளது.

ஒன்றுகூடல், கருத்து சுதந்திரம் ஆகியவற்றிற்கான உரிமைகளை கட்டுப்படுத்துகின்றது எனவும் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமைதியான விதத்தில் தன்னை விமர்சிப்பவர்களையும் சிறுபான்மை சமூகத்தவர்களையும் இலக்கு வைப்பதற்கான கடுமையான சட்டங்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவுக்கான இயக்குநர் மீனாக்சி கங்குலி தெரிவித்துள்ளார். (அ)

# புதிய பயங்கரவாத தடைச்சட்டம்; ஏப்ரல் 25 விசேட கலந்துரையாடல்!

கொழும்பு, ஏப். 08

"புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு சர்வதேச மட்டத்திலிருந்து எந்தவொரு எதிர்ப்பும் வெளியாகவில்லை. ஏப்ரல் இறுதியில் அல்லது மே முதல் வாரத்தில் குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும்." - என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது சற்று பிற்போடப்படுகின்றது. ஆய்வுக்காக காலம் அவசியம் என சட்டத்தரணிகள், எதிர்க்கட்சி பிரதிநிதிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம்தான் இவ்வாறு பிற்போடப்படுகின்றது. எனினும், ஏப்ரல் இறுதியில் அல்லது மே முதல் வாரத்தில் சட்டமூலம் சபையில் முன்வைக்கப்படும்.

சட்டமூலம் முன்வைப்பதற்கு முன்னர், பாராளுமன்றத்தில் கலந்துரையாடல் அவசியம் என எதிரணிகள் கோரிக்கை விடுத்தன. இதன்படி ஏப்ரல் 25 ஆம் திகதி துறைசார் மேற்பார்வைக்குழு கூட்டத்தின்போது விவகாரம், விவாதத்துக்கு எடுக்கப்படும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தால் தொழிற்சங்கவாதிகள்,சமூக செயற்பாட்டாளர்களுக்கு பாதிப்பு இல்லை. மக்களை பாதுகாக்கவே சட்டமூலம் வருகின்றது." எனவும் நீதி அமைச்சர் கூறினார். (அ)

# குறைந்த விலையில் தரமற்ற பொருட்கள்

கொழும்பு, ஏப். 08

சந்தையில் தற்போது, காலாவதியான மற்றும் மனித தரமற்ற உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக, இலங்கை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, உணவு பொருட்களை உரிய முறையில் பார்த்து கொள்வனவு செய்யுமாறு, இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண பொதுமக்களை வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி வரை, உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில், உணவுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

அதற்காக நாடளாவிய ரீதியில், சுமார் மூவாயிரத்து 200 அதிகாரிகள் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

விசேடமாக பண்டிகைக் காலத்தில் உற்பத்தி செய்யப்படும் உணவுகள் மற்றும் அவற்றுக்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தொடர்பில் ஆராயப்படும்.

இதன்போது, முறைக்கேடான சம்பவங்கள் இடம் பெற்றால், அவை தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்படும்.

அதேநேரம், சந்தேகத்துக்கு இடமான முறையில் ஏதேனும் செயற்பாடுகள் இடம்பெற்றால், அவற்றை 011 263 5675 என்ற பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் அழைப்பை ஏற்படுத்தி அறிவிக்க முடியும் என அதன் தலைவர் உபுல் ரோஹண கூறினார்.

# இலங்கையின் சகல துறைகளும் அமெரிக்காவின் கட்டுப்பாட்டில்

## அஜித் நிவார்ட் கப்ரால் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 08

**அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் இலங்கை உள்ளதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.**



இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அரசியலையும் அமெரிக்கா முன்னெடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி ஆளுநரும், நாட்டின் தலைவர்களும் கவனத்துடன் செயற்படவேண்டும் என கப்ரால் தெரிவித்தார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே முன்னாள் ஆளுநர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஒன்பது வருடங்களாக இந்த வேலையை நான் செய்தேன். நான் எப்போதாவது ஒரு நாள் புகார் செய்திருக்கிறேனா அல்லது அழுதிருக்கிறேனா?

போரையும் மீறி நாங்கள் எங்கள் பணியை செய்தோம். அதுதான் மத்திய வங்கி ஆளுநருக்கும் நாட்டின் தலைவர்களுக்கும் தேவை.

இனி எங்களிடமோ அல்லது இந்த நாட்டின் தலைவரிடமோ பேசுவதில் அர்த்தமில்லை. எல்லாமே அமெரிக்கா - என்றார். (அ)



# ஜனாதிபதியை சந்தித்த தென்கொரியத் தூதுவர்

கொழும்பு, ஏப். 08

தனது பதவிக்காலத்தை நிறைவுசெய்த பின்னர் தாய் நாடு திரும்பும், இலங்கைக்கான தென்கொரிய தூதுவர், ஜொன்ங் வூன்ஜின், ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தார்.

தான் நாடு திரும்புவதை ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்ததுடன், சிநேகபூர்வ கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

ஜொன்ங் வூன்ஜின், தனது பதவிக்காலத்தில் இலங்கைக்கு வழங்கிய ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவரின் எதிர்காலப் பணிகள் வெற்றியடைய வாழ்த்துகளைத் தெரிவித்தார்.இந்த நிகழ்வில் காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்தனவும் கலந்துகொண்டார்.

ஜொன்ங் வூன்ஜின் 2020 ஜூலை 02ஆம் திகதி முதல் இலங்கைக்கான தென்கொரியத் தூதுவராகப் பணியாற்றி வந்தார். (அ)

# ஐரோப்பா செல்வதற்கு போலி வீஸாவில் இலங்கை வந்த ஈராக் இளைஞன் கைது!

கொழும்பு, ஏப். 08

ஐரோப்பாவுக்கு தப்பிச் செல்லும் நோக்கில் டொமினிக்கன் குடியரசின் போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்குள் பிரவேசிக்க முயன்ற ஈராக் இளைஞர் மற்றும் அவரது தந்தையை நாடு கடத்த கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அவர் 18 வயது ஈராக் இளைஞர். டுபாய் எயார்லைன்ஸின் எவ்.இசற்-569 இலக்க விமானத்தில் டுபாயிலிருந்து நேற்று அதிகாலை 01.10 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அங்கு, இலங்கைக்குள் பிரவேசிப்பதற்காக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் அமைந்துள்ள குடிவரவுத் திணைக்கள சாளரத்தை அணுகி டொமினிக்கன் குடியரசு கடவுச்சீட்டு மற்றும் ஏனைய ஆவணங்களை வழங்கினார்.

சந்தேகத்தின் அடிப்படையில் இந்த ஆவணங்களை கட்டுநாயக்க விமான நிலைய எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவில் சமர்ப்பிக்க அங்கு பணியாற்றிய குடிவரவு குடியகல்வு பிரதான அதிகாரி நடவடிக்கை எடுத்தார்.

அதன்படி, விசாரணையில், கடவுச் சீட்டின் பெயர்விவரப் பக்கம் போலியாக தயாரிக்கப்பட்டமை தெரியவந்தது.

பின்னர், இந்த இளைஞனிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, அவருடன் தந்தையும் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து, கட்டுநாயக்க விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகள், அவர்கள் வந்த அதே விமானத்தில் மீண்டும் டுபாய்க்கு நாடு கடத்த நடவடிக்கை எடுத்தனர். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் விபத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மேலும் நட்டஈடு

## அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கொழும்பு, ஏப். 08

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான நட்டஈட்டின் நான்காவது கட்டத்தை தமிழ் - சிங்கள புது வருடப் பிறப்புக்கு முன்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடற்றொழில் அமைச்சரின் தொடர்ச்சியான முயற்சியினால் குறித்த கப்பல் விபத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழில் சார்ந்த மக்களுக்கான நான்காவது கட்ட நட்டஈட்டு தொகையாக சுமார் 15 ஆயிரத்து 149 இலட்சம் ரூபாய் (ரூ.1,514,900,000) கடற்றொழில் அமைச்சுக்கு கிடைத்துள்ள நிலையில், அவற்றை உடனடியாக பயனாளிகளுக்கு வழங்கி வைப்பதற்கான ஆலோசனைகளும் கடற்றொழில் அமைச்சினால் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நான்காம் கட்ட நட்டஈட்டினை பெற்றுக் கொள்வோர் தொடர்பான விவரங்கள் கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தின் அதிகாரிகள் ஊடாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், காசோலைகளை சம்பந்தப்பட்ட மாவட்ட செயலகங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளையும் கடற்றொழில் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

ஏற்கனவே மூன்று கட்டங்களாக கிடைத்திருந்த நட்டஈட்டு தொகை பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு மாத்திரம் பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையில், தற்போது கிடைத்துள்ள நான்காவது கட்ட நட்டஈட்டை கடலுணவு வியாபாரிகள், கருவாடு உற்பத்தியாளர்கள் போன்ற கடற்றொழில் சார்ந்த தொழிலாளர்களுக்கும் பகிர்ந்தளிக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேவாலயங்களுக்கான பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 08

தேவாலயங்களை அண்மித்து பாதுகாப்பை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபரால் இந்த விடயம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித் தார்.

இதேவேளை பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை காணப்படுமாக இருந்தால், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரை அழைக்கும் இயலுமை காணப்படுவதாக அவர் கூறினார்.

ஏதேனும், தேவைகள் காணப்படுமானால் இரா ணுவ அதிகாரிகளையும் அழைக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

இதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ கூறினார். (ஐ)

# 25 வயதான முன்பள்ளி ஆசிரியை வீதியில் கழுத்தறுத்து படுகொலை!

கொழும்பு, ஏப். 08

பேராதனை, இலுக்வத்தை பகுதியில் நேற்றுக் காலை 25 வயதுடைய முன்பள்ளி ஆசிரியை கழுத்து அறுத்துக் கொலை செய்யப்பட்டார் என பேராதனை பொலிஸார் தெரிவித்தனர். அஞ்சலி சாப்பா (வயது-25) என்ற இளம் யுவதியே கொல்லப்பட்டுள்ளார்.

பாலர் பாடசாலையில் நடைபெறவிருந்த புத்தாண்டு கொண்டாட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த வேளையில் கினிஹேன மயானத்திற்கு அருகில் அவரது கழுத்தை யாரோ அறுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்பள்ளி ஆசிரியை வீட்டுக்கு வரும்போது யாருடனோ தொலைபேசியில் பேசிக்கொண்டிருந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. அவரது கையடக்கத் தொலைபேசியிலிருந்து தரவுகளை பெற்று சந்தேகநபரை அடையாளம் காண பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

சந்தேகநபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும், அவரை கைது செய்வதற்கான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் கூறினர். (அ)

# அரபு நாடுகள் கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்க திடீர் முடிவு - என்ன காரணம்?

**தில்நவாஸ் பாஷா**

சவூதி அரேபியா, ஈராக், குவைத் உள்ளிட்ட பல நாடுகள் திடீரென எண்ணெய் உற்பத்தியை குறைப்பதாக அறிவித்துள்ளன.

சவூதி அரேபியா எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு ஐந்து லட்சம் பீப்பாய்கள் குறைக்கிறது.

ஈராக் உற்பத்தியை 2,11,000 பீப்பாய்கள் குறைக்கிறது.

உற்பத்தி குறைப்பு அறிவிப்புக்கு பிறகு சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்துள்ளது.

‘பொருளாதார மந்தநிலை ஏற்பட வாய்ப்புள்ளதால் முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது’ என அரபு நாடுகள் தெரிவித்துள்ளன.



உலகின் பல பெரிய எண்ணெய் உற்பத்தி நாடுகள் திடீரென எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதாக அறிவித்ததைத் தொடர்ந்து கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது.

கச்சா எண்ணெய் விலை திங்கள்கிழமை வர்த்தகத்தின் தொடக்கத்தில் பீப்பாய்க்கு 5 டாலர்கள் வரை உயர்ந்தது. அதாவது, சுமார் 7 சதவிகித அதிகரிப்புடன் பீப்பாய் ஒன்றின் விலை 85 டாலர்களை எட்டியது.

சவூதி அரேபியா, ஈராக் மற்றும் பல வளைகுடா நாடுகள் எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு பத்து லட்சம் பீப்பாய்கள் வரை குறைக்கும் திட்டத்தை ஞாயிற்றுக்கிழமை அறிவித்தன. இந்த அறிவிப்பால் சர்வதேச எண்ணெய் சந்தையில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பெப்ரவரியில் ரஷ்யா, யுக்ரேன் மீது போர் தொடுத்தபோது, கச்சா எண்ணெய் விலையில் பெரும் ஏற்றம் ஏற்பட்டது. அந்த காலகட்டத்தில் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 130 டாலரை எட்டியிருந்தது. ஆனால் தற்போது கச்சா எண்ணெய் விலை போர் தொடங்கும் முன் இருந்த நிலையை அடைந்துள்ளது.

எண்ணெய் விலை உயர்வால் கடந்த ஆண்டு உலக அளவில் விலைவாசி அதிகரித்தது. எண்ணெய் இறக்குமதியை நம்பியிருக்கும் நாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. பல நாடுகளில் சாமானிய மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கடினமாகிவிட்டது.

அதே நேரத்தில் எண்ணெய் விலை குறைவாக இருக்கும் வகையில் உற்பத்தியை அதிகரிக்குமாறு எண்ணெய் உற்பத்தியாளர்களிடம் அமெரிக்கா வேண்டுகோள் விடுத்திருந்தது. ‘சந்தையில் தற்போது நிலவும் நிச்சயமற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு உற்பத்தி குறைப்பு பொருத்தமானது அல்ல என்று நாங்கள் கருதுகிறோம். இதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம்.” என்று எண்ணெய் உற்பத்தி குறைப்பு அறிவிப்பு தொடர்பாக கருத்து தெரிவித்த அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபையின் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

எண்ணெய் விலை அதிகரித்தால் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது கடினம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கச்சா எண்ணெய் விலை உயரும் பட்சத்தில், போக்குவரத்துச் செலவு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஓபெக் உடன் தொடர்புடைய நாடுகள் ஞாயிற்றுக்கிழமை வெட்டுக்களை அறிவித்துள்ளன. ரஷ்யா ஏற்கனவே தனது எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு ஐந்து லட்சம் பீப்பாய்கள் குறைத்துள்ளது.

எண்ணெய் உற்பத்தியில் இந்த குறைப்பு ஓபெக் பிளஸ் உறுப்பு நாடுகளால் செய்யப்பட்டுள்ளது. உலகின் மொத்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 40 சதவிகிதம், ஓபெக் குழும நாடுகளால் செய்யப்படுகிறது.

சவூதி அரேபியா ஒரு நாளைக்கு 5 லட்சம் பீப்பாய்களை குறைக்கப் போகிறது. ஈராக் ஒரு நாளைக்கு 2 லட்சத்து 11 ஆயிரம் பீப்பாய்களை குறைக்கும். இது தவிர ஐக்கிய அரபு ஆமீரகம், ஓமன், குவைத், அல்ஜீரியா ஆகிய நாடுகளும் உற்பத்தியை குறைக்கப் போகின்றன.

எண்ணெய் சந்தையின் ஸ்திரத்தன்மையை கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சவூதி அரேபியா ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது என்று சவூதி அரேபியாவின் அதிகாரப்பூர்வ செய்தி சேவையான அரப் நியூஸ் தெரிவிக்கிறது.

மறுபுறம், குவைத்தின் எண்ணெய் அமைச்சர் பத்ர் அல் முல்லாவும் ஒரு அறிக்கையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எண்ணெய் உற்பத்தியை குறைக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

“சந்தை நிலையற்றதாக உள்ளது. உலக சந்தையில் தேவைக்கு அதிகமான எண்ணெய் கிடைப்பதாலும் எண்ணெய் உற்பத்தியை குறைக்க ஒபெக் பிளஸ் ஒப்புக்கொண்டுள்ளது” என்று ரஷ்யாவின் துணைப் பிரதமர் அலெக்சாண்டர் நோவாக் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறினார்.

யுக்ரேன் போர், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் வங்கி நெருக்கடிக்கு மத்தியில், உலகப் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படும் என்ற அச்சம் அதிகரித்து வருகிறது. உலகப் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்பட்டால், அதன் காரணமாக எண்ணெய் பயன்பாடு குறையக்கூடும்.

சர்வதேசப் பொருளாதாரத்தின் மீதான மந்தநிலையின் அச்சத்தைக் கருத்தில் கொண்டு, எண்ணெய் விலையை நிலையானதாக வைத்திருக்க எண்ணெய் உற்பத்தி நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க இருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

‘கச்சா எண்ணெய் விலை மீண்டும் பீப்பாய்க்கு 80 டாலராக ஆகியிருக்கும் நேரத்தில், முன்னெச்சரிக்கை அல்லது இழப்பை நிறுத்துதல் என்ற வாதத்தை ஏற்றுக்கொள்வது எளிதானது அல்ல. கடந்த பதினைந்து மாதங்களில் இல்லாத அளவுக்கு மார்ச் மாதத்தில் கச்சா எண்ணெய் விலை குறைந்துள்ளது,” என்று எண்ணெய் சந்தை பகுப்பாய்வு நிறுவனமான ஏயனெய ஐளெபைாவள இன் நிறுவனர் வந்தனா ஹரி, செய்தி முகமையான ராய்ட்டர்ஸிடம் கூறினார்,





எண்ணெய் விலை அதிகரித்தால் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவது கடினம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கச்சா எண்ணெய் விலை உயரும் பட்சத்தில், போக்குவரத்துச் செலவு அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஓபெக் உடன் தொடர்புடைய நாடுகள் ஞாயிற்றுக்கிழமை வெட்டுக்களை அறிவித்துள்ளன. ரஷ்யா ஏற்கனவே தனது எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு ஐந்து லட்சம் பீப்பாய்கள் குறைத்துள்ளது.

எண்ணெய் உற்பத்தியில் இந்த குறைப்பு ஓபெக் பிளஸ் உறுப்பு நாடுகளால் செய்யப்பட்டுள்ளது. உலகின் மொத்த கச்சா எண்ணெய் உற்பத்தியில் 40 சதவிகிதம், ஓபெக் குழும நாடுகளால் செய்யப்படுகிறது.

### அரபு நாடுகள் ஏன் உற்பத்தியை குறைக்கின்றன?

உலகப் பொருளாதாரத்தில் நிலவும் நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எண்ணெய் உற்பத்தி நாடுகள் கூறுகின்றன. இருப்பினும், இதற்கு வேறு ஏதாவது காரணம் இருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

‘ஒரு நாளைக்கு சுமார் 16 லட்சம் பீப்பாய்கள் உற்பத்தி குறைக்கப்படும். இது மே முதல் செயல்படுத்தப்படும்.” என்று பிரபல எரிசக்தி நிபுணர் நரேந்திர தனேஜா கூறினார்.



அமெரிக்காவின் செயல் உத்தி இருப்பு (அவசரகால நிலைமைகளுக்கான எண்ணெய் இருப்பு) மிகக் குறைந்த அளவில் இருக்கும் நேரத்தில் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதற்கான இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கா தனது இருப்பை நிரப்ப அதிக அளவு எண்ணெய் வாங்க வேண்டியுள்ளது. கச்சா எண்ணெய் விலை அதிகரித்தால் அமெரிக்கா மிகப் பெரிய பாதிப்பை சந்திக்க நேரிடும். அமெரிக்க பொருளாதாரம் ஏற்கனவே

(09ஆம் பக்கம் பார்க்க)

# டிரம்ப் உறவில் இருந்த மற்றொரு மொடல் கேரன் மெக்டோகல்!

## புதுமையான உத்தி மூலம் பேசுவது தடுக்கப்பட்டது எப்படி?

அமெரிக்க முன்னாள் அதிபர் டிரம்ப் ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு பணம் வழங்கிய வழக்கில், வழக்குரைஞரால் குறிப்பிடப்பட்டுள்ள மற்றொரு பெண் பிரபலம் கேரன் மெக்டோகல்.

ஸ்டோர்மியைப் போலவே கேரன் மெக்டோகலுக்கும் பணம் வழங்கப்பட்டதாக வழக்கு சார்ந்த ஆவணங்கள் தெரிவிக்கின்றன. பிளேபாய் இதழின் முன்னாள் மாடலான மெக்டோகல் 10 மாதங்கள் டிரம்புடன் தொடர்பில் இருந்ததாக அறிவித்திருந்தார். இதை டிரம்ப் முற்றிலும் மறுத்திருந்த நிலையில், கேரன் மெக்டோகல் யார் என்றும், இந்த வழக்குடன் எப்படி அவர் தொடர்பு படுத்தப்பட்டிருக்கிறார் என்றும் பார்க்கலாம்.

அமெரிக்காவின் இண்டியானா மாகாணத்தில் உள்ள கேரி என்ற இடத்தில் பிறந்தவர் கேரன் மெக்டோகல். மிச்சிகனில் வளர்ந்த இவர் தனது 20-களில் நீச்சலுடை அழகுபோட்டிகளின் மூலம் தனது மாடலிங் பயணத்தை தொடங்கினார்.

பின்னர் பிளேபாய் இதழில் இணைந்த கேரன், “1998ம் ஆண்டின் சிறந்த பிளேமேட்” என்ற விருதை வென்றதுடன், “90-களின் சிறந்த பிளேமேட்” என்ற விருதிற்கு இரண்டாவது வெற்றியாளராக வாக்களிக்கப்பட்டார்.

பின்னர் பிட்னஸ் மாடலாக பணியாற்றிய கேரன், 1999ம் ஆண்டில் ஆண்களுக்கான பிட்னஸ் இதழின் அட்டைப்படத்தில் இடம்பெற்ற முதல் பெண் ஆனார். சார்லிஸ் ஏஞ்சல்ஸ் உட்பட சில திரைப்படங்களில் சிறிய கௌரவ வேடங்களிலும், சில தொலைக்காட்சி விளம்பரங்களிலும் தோன்றியுள்ளார்.

2006-ல் நியூ யாக்கர் இதழுக்கு பேட்டியளித்த கேரன் மெக்டோகல், ட்ரம்பை முதன்முதலில் ப்ளேபாய் மேன்ஷனில், தி அப்ரென்டிஸ் தொடரின் படபிடிப்பின் போது சந்தித்ததாக கூறினார். அப்போது



திருமணமானவராக இருந்த டிரம்ப் தன்னிடம் தான் அழகாக உள்ளதாகக் கூறி பேசிக் கொண்டே இருந்ததாக கூறினார்.

சி.என்.என் நிறுவனத்திற்கு கேரன் அளித்த பேட்டியில், தானும் ட்ரம்பும் உறவில் இருந்த 10 மாதகாலத்தில், குறைந்தது மாதம் 5 முறையாவது சந்தித்ததாகவும் உறவு காதலுடனும், சம்மதத்துடனும் நிகழ்ந்ததாகவும் கூறியிருந்தார்.

2016 பிரசாரத்தின்போது, தி நேஷனல் என்கொயரர் என்னும் டேப்ளாய்ட் பத்திரிகைக்கு பிரத்தியேகமாக பேட்டியளிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார் கேரன்.

டிரம்ப் உடனான தனது உறவைப் பற்றி இந்தப் பத்திரிகை தவிர வேறு எவரிடமும் கேரன் பேசக்கூடாது என்ற நிபந்தனையை உள்ளடக்கியதாக இருந்தது அந்த ஒப்பந்தம்.

ஆனால் அந்தப் பேட்டி வெளிவரவில்லை என்று உணர்ந்த பின்பே தான் தந்திரமாக ஏமாற்றப்பட்டிருப்பது தனக்கு புரிந்ததாக கேரன் கூறினார். அந்த தொடர்பு குறித்து கேரன் பொதுவெளியில் பேசுவதை தடுப்பதன் மூலம் டிரம்புக்கு எதிரான செய்திகள் வெளிவருவதை தடுக்க தி நேஷனல் என்கொயரர் உதவியுள்ளது.

2021-ம் ஆண்டு, அமெரிக்க தேர்தல் ஆணையம் இந்த சம்பவத்தை கண்டறிந்தது. இது டிரம்பின் தேர்தல் பிரசாரத்திற்கு மறைமுகமாக உதவியதால் தி நேஷனல் என்கொயரர் பத்திரிக்கைக்கு சுமார் ஆறு கோடி இலங்கை ரூபா அளவில் அபராதம் விதிக்கப்பட்டது.

தற்போது கேரன் மெக்டோகல் தன்னை ஒரு மாடலாகவும், கட்டுரையாளராகவும், வழக்கறிஞராகவும், பேச்சளராகவும் தனது வலைதளத்தின் மூலம் அடையாளப்படுத்தி வருகிறார். மார்பகத்தை பெரிதாக்க உதவும் அழகுசாதன சிகிச்சை செய்து கொண்டிருந்த கேரனுக்கு அதனால் உடல் நலக்குறைவு ஏற்பட்டிருந்ததால் 2017-ல் அவற்றை தன் உடலில் இருந்து நீக்கியிருந்தார். அது தொடர்பான விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வந்தார்.

2018-ல் தான் ட்ரம்புடன் வைத்திருந்த தொடர்புக்காக அவருடைய மனைவி மெலானியாவிடம் மன்னிப்பு கேட்டார் கேரன். “ நான் செய்தது தவறு. எனக்கு இப்படி ஒன்று நடப்பதை நானும் விரும்பமாட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் “ என்று பொதுவெளியில் மன்னிப்பு கேட்டார். எனினும் இறுதிவரை டிரம்ப் இது தொடர்பான குற்றச்சாட்டை மறுத்தே வந்துள்ளார்.

தற்போது நடந்து வரும் வழக்கு முழுக்க முழுக்க ஆபாச நடிகை ஸ்டோர்மி டேனியல்ஸூக்கு பணம் வழங்கியதற்காக நடக்கும் வழக்கு என்பதும் கேரன் மெக்டோகல் தொடர்பான செய்திகள் பின்புல தகவலுக்காக மட்டுமே வழக்கில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த வழக்கில் தன் மீது சுமத்தப்படும் அனைத்து குற்றச்சாட்டுகளையும் டிரம்ப் மறுத்தே வருகிறார்.

●

---

# அரபு நாடுகள் கச்சா எண்ணெய் உற்பத்தியை....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

மந்தநிலையின் அதிர்வுகளை சந்தித்து வருகிறது. இப்போது எண்ணெய் விலை மேலும் அதிகரித்தால் அமெரிக்கா அதிக செலவு செய்ய வேண்டியிருக்கும்.

“இப்போது நாங்களே விலையை முடிவு செய்து உற்பத்தியை நிர்ணயம் செய்வோம். யாருடைய அழுத்தத்திற்கும் அடிபணிய மாட்டோம் என்பதை எண்ணெய் உற்பத்தி நாடுகள் காட்டுகின்றன. முன்பு அமெரிக்காவின் ஆதிக்கத்தின் கீழ் சவூதி அரேபியா இருந்தது. ஆனால் எண்ணெய் விஷயத்தில் நாங்கள்தான் முடிவெடுப்போம் என்ற சமிஞ்சையை சவூதி அரேபியா அமெரிக்காவுக்கு கொடுப்பதுபோல காணப்படுகிறது,” என்று நரேந்திர தனேஜா கூறினார்.

### மாறிவரும் உலகின் எண்ணெய் அமைப்புமுறை

உலகின் எண்ணெய் அமைப்புமுறையில் பெரும் மாற்றங்கள் ஏற்படுவதற்கான அறிகுறிகளையும் இந்த புதிய நிகழ்வுகளில் ஆய்வாளர்கள் காண்கிறார்கள்.

“யுக்ரேன் போருக்குப் பிறகு சர்வதேச எண்ணெய் அமைப்புமுறை நிலையற்றதாக ஆகியுள்ளது. போருக்கு முன்பு, எண்ணெய் அமைப்பு மற்றும் சந்தை நிலையானதாக இருந்தது. ஆனால் யுக்ரேன் போருக்குப் பிறகு எண்ணெய், ஆயுதம் போல பயம்படுத்தப்படுகிறது. மேற்கத்திய நாடுகள் ரஷ்ய எண்ணெயை தடை செய்துள்ளன. ரஷ்யா தனது எண்ணெயின் விலையைக் குறைத்தபோது, அதை ஐரோப்பிய சந்தையில் விற்கக் கூடாது என்பதற்காக ஐரோப்பிய நாடுகள் அதன் கொள்முதலைத் தடை செய்தன. யுக்ரேன் போர் எண்ணெய் அமைப்பை சீர்குலைத்தது. புதிய அமைப்பை உருவாக்க முடியவில்லை.” என்று நரேந்திர தனேஜா தெரிவித்தார்.

“சவூதி அரேபியா, ஈராக், குவைத் போன்ற நாடுகள், யாரையும் பொருட்படுத்தாமல் எண்ணெய் உற்பத்தியை குறைத்துவிட்டன. இதை ஒபெக் கூட்டத்திற்கு முன்பே இந்த நாடுகள் அறிவித்தன. மேற்கத்திய நாடுகள் மீது அதன் விளைவு என்னவாக இருக்கும் என்றுகூட இந்த நாடுகள் யோசிக்கவே இல்லை. ஒரு நாளைக்கு 16 லட்சம் பீப்பாய்கள் உற்பத்தியை குறைப்பது ஒரு புதிய சர்வதேச எண்ணெய் அமைப்புமுறை பிறக்கிறது என்பதற்கான அறிகுறியாகும். ஆனால் அதன் வரையறைகள் என்னவாக இருக்கும் என்று சொல்வது கடினம்.” என்றார் அவர்.

‘எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் இந்த முடிவுக்குப் பிறகு விலை மேலும் அதிகரித்தால், உலகின் பல பகுதிகளில் விலைவாசி அதிகரிப்பு ஏற்படக்கூடும். ஒருதலைப்பட்சமான வெட்டுக்களை அறிவித்ததன் மூலம் இப்போது யாருடைய அழுத்தத்திலும் தாங்கள் இல்லை என்பதை எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் தெளிவுபடுத்தியுள்ளன. இதற்கு அமெரிக்காவும் மேற்கத்திய நாடுகளும் எப்படி எதிர்வினையாற்றுகின்றன என்பதை பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்” என்கிறார் தனேஜா.

### எண்ணெய் விலை உயருமா?

எதிர்காலத்தில் எண்ணெய் விலை என்னவாக இருக்கும் என்று சொல்வது கடினம். எண்ணெய் விலை பல காரணிகளைப் பொருத்தது. இந்த நிலையில் உற்பத்தியை குறைத்தால் அடுத்த சில மாதங்களில் எண்ணெய் விலை கணிசமான அளவு அதிகரிக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது. இப்படி நடக்கும் வாய்ப்பு குறைவு என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

“அடுத்த மூன்று மாதங்களில் எண்ணெய் விலை பீப்பாய்க்கு 80 முதல் 90 டாலர்கள் வரை இருக்கும் என்று மதிப்பிடலாம். எண்ணெய் 90 டாலரை எட்டினால், இந்தியா போன்ற பொருளாதாரம் சிக்கலில் மாட்டிக்கொள்ளும். ஆனால் அதை சமாளிக்க முடியும். அதைத்தாண்டி எண்ணெய் விலை உயர்ந்தால் பிரச்சனை வரலாம்,” என்று நரேந்திர தனேஜா கூறுகிறார்.

மறுபுறம் கச்சா எண்ணெயை பீப்பாய்க்கு 80 டாலர்கள் என்ற விலைக்குக் கீழே விற்பது லாபகரமானது அல்ல என்று சவூதி அரேபியா போன்ற எண்ணெய் உற்பத்தியாளர்கள் வாதிடுகின்றனர். எனவே தேவை மற்றும் விநியோகத்தை சமப்படுத்த அந்த நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கின்றன.

“எதிர்காலத்தில் யுக்ரேன் போர் கைமீறிப்போனால் அல்லது கொரோனா தொற்றுநோய் மீண்டும் திரும்பினால் அல்லது சீனாவின் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைந்தால், இது போன்ற ஏதாவது நடந்தால், எண்ணெய் விலை மேலும் உயரலாம். இதுபோல பெரிதாக எதுவும் நடக்கவில்லை என்றால் குறைந்தபட்சம் அடுத்த மூன்று மாதங்களுக்கு எண்ணெய் விலை அதிகம் உயராது. இந்திய நுகர்வோரும் எண்ணெய் விலை அதிகரிப்பால் சிரமப்பட வாய்ப்பில்லை,”என்று நரேந்திர தனேஜா குறிப்பிட்டார். (பிபிசி)

●

# நாமகளில் பரிசளிப்பு விழா!




அக்கரைப்பற்று, ஏப். 08

சம்மாந்துறை வலய நாவிதன் வெளி கோட்டத்தில் பின்தங் கிய ஏழாம் கிராமம் நாமகள் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் எம்.இலங்கேஸ்வரன் தலைமையில் நேற்று முன்தினம் சிறப்பாக இடம் பெற்றது .

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் யாசிர் அரபாத் முகைதீன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக உதவிக் கல்விப் பணிப்பாளர்களான எம். நைரூஸ்கான், வி.ரி. சகாதேவராஜா, ஆசிரியஆலோசகர் கே. அற்புதராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த கே. நிவ்ஜன் உள்ளிட்ட ஏனைய மாணவர்களும் மற்றும் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற சகல மாணவர்களுக்கும் பதக்கங்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (அ)

# நியூசிலாந்துக்கு சென்ற 248 பேரின் நிலை என்ன?

கொழும்பு, ஏப். 08

தமிழகத்திலிருந்து புகலிடம் கோரி நியுசிலாந்துக்கு கடல் பயணம் மேற்கொண்டவர்கள் தொடர்பில் அரசாங்க பதிவேட்டில் எவ்வித பதிவுகளும் இல்லை என நியூசிலாந்து அறிவித்துள்ளது.

நியூசிலாந்தின் குடிவரவு அமைச்ச மைக்கல் வூட் இதனை தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்துக்கு சட்ட விரோதமாக வருகை தருவோரை நான்கு முதல் 28 நாட்கள் வரை தடுப்புக்காவலில் வைக்கும் சட்டம் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி அந்த நாட்டில் அமுல்படுத்தப்பட்டது.

இதன்போது நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் புகலிடம் கோரியவர்களின் பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியல் வெளியிடப்பட்டது.

முன்னதாக, கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி 90 அடி நீளமுள்ள மீன்பிடி இழுவை படகு ஒன்று, இந்தியாவின் முனம்பம் அருகே மாலியங்கராவில் இருந்து புறப்பட்டதாகவும், அதில் 248 தமிழ் புலம் பெயர்ந்தோர் அவுஸ்திரேலியா அல்லது நியூசிலாந்துக்கு செல்லலாம் என்ற நம்பிக்கையில் பயணித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன. எனினும் பின்னர் தகவல்கள் எவையும் வெளியாகவில்லை.

இந்தநிலையில் நியூசிலாந்து குடிவரவு பதிவேட்டில் அவர்கள் தொடர்பிலான விவரங்கள் உள்ளதா என்று அமைச்சரிடம் வினவப்பட்டுள்ளது.

எனினும் குறித்த படகு மற்றும் படகில் பயணித்தவர்கள் தொடர்பிலான விபரங்கள் நியூசிலாந்து அரசாங்க பதிவேட்டில் இல்லை என குடிவரவு அமைச்சர் தெரிவித்தார்.

குறித்த புகலிடக் கோரிக்கையாளர்கள் நியூசிலாந்துக்கே சென்றதாக குறித்த பயணத்தை ஏற்பாடு செய்ததாகக் கூறப்பட்டு இந்தியாவில் வைத்து கைது செய்யப்பட்ட பிரபு தண்டபாணி என்பவர் தெரிவித்திருந்த நிலையில் நியூசிலாந்து அமைச்சின் கருத்து வெளியாகியுள்ளது.

இந்த சூழ்நிலையில் குறித்த 248 பேருக்கும் என்ன நடந்தது என்ற கேள்வியுடன் வெளிநாட்டு ஊடகங்கள் செய்திகளை பிரசுரித்துள்ளன. (அ)

# பெண்களின் நிலை குறித்த ஐ.நாவின் ஆணைக்குழுவுக்கு இலங்கை தெரிவு

கொழும்பு, ஏப். 08

பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழுவுக்கு இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5ஆம் திகதி, நியூயோர்க்கில் இடம் பெற்ற, ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக சபையின் கூட்டத்தில், 2024 முதல் 2028 வரையான நான்கு ஆண்டுகளுக்காக இலங்கை தெரிவாகியுள்ளதென வெளிவிவகார அமைச்சு, அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

பங்களாதேஷ், பெல்ஜியம், பொலிவியா, கொலம்பியா, ரூமேனியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளும், இந்த ஆணைக்குழுவுக்கு தெரிவாகியுள்ளன.

தேசிய மட்டத்தில் பெண்கள் மற்றும் சிறுமிகளின் உரிமைகளை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் பாலின அடிப்படையிலான பாகுபாடுகளை அகற்றுவதற்கான அதன் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், இலங்கை சார்பில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

1981 இல் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் நீக்குவதற்கான மாநாட்டை இலங்கை அங்கீகரித்துள்ளது.

1946 இல் நிறுவப்பட்ட பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு, 45 உறுப்பு நாடுகளை உள்ளடக்கியது,

உலகளாவிய நிகழ்ச்சி நிரலில், முக்கிய பாலின சமத்துவப் பிரச்சினைகள் தொடர்பிலும், தேசிய அளவில் நடவடிக்கை மற்றும் செயல்படுத்தலை ஊக்குவிக்கவும், இந்த ஆணைக்குழு செயற்படுகிறது.

அத்துடன், நிலையான வளர்ச்சிக்கான 2030 இன் நிகழ்ச்சி நிரலை செயல்படுத்துவதற்கும் பெண்களின் நிலை குறித்த ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழு பங்களிக்கிறது. (அ)

# கடத்தப்பட்ட 6 எருமைகள் மீட்பு

அக்கரைப்பற்று, ஏப். 08

பொலனறுவை, கிரித்தலை பிரதேசத்தில் இருந்து காத்தான்குடி பிரதேசத்துக்கு லொறியில் சட்டவிரோதமாக எருமை மாடுகளை கடத்திச் சென்ற ஒருவரை காத்தான்குடி கடற்கரை வீதியில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை மாவட்ட குற்ற விசாரணப் பிரிவினர் கைது செய்தனர்.

அத்துடன் ஆறு எருமை மாடுகளையும் அவர்கள் மீட்டனர்.

மாவட்ட குற்ற விசாரணப் பிரிவுக்கு கிடைத்த தகவலை அடுத்து மாவட்ட குற்ற விசாரணப் பிரிவு பொறுப்பதிகாரி, உபபொலிஸ் பரிசோதகர் டிலங்கவெலவின் ஆலோசனையில் சப் இன்பெக்ஸ்டர் ஆர். எம்.ஆர் சதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர், சம்பவ தினமான நேற்று முன்தினம் அதிகாலை காத்தான்குடிகடற்கரை வீதியில் வைத்து குறித்த லொறியை மடக்கிப் பிடித்து சோதனையிட்டனர்.

இதன்போது லொறியில் ஆறு எருமை மாடுகளை கடத்தியமை கண்டுபிடித்து லொறியின் சாரதியை கைது செய்ததுடன் ஆறு மாடுகளையும் மீட்டனர். (அ)






# இனவாத, மதவாத போக்கு நாட்டை தலை நிமிரவிடாது

## மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத்



கொழும்பு, ஏப். 07

**புல்மோட்டை, அரிசிமலை, பொன்மலைக் குடா பிரதேசத்தில் கட்டவிழ்க்கப்பட்டுள்ள இனவாத விஸ்தரிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்த மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், இனவாத மற்றும் மதவாதப் போக்குகளினாலேயே நாட்டின் பொருளாதாரம் கையேந்தும் நிலைக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்- இதுவரை காலமும் ஆட்சியமைத்தவர்களும் ஆட்சியமைக்க துடித்தவர்களும், பேரினவாத சிந்தனையோடு இனவாதத்தை முதலீடாகவும் மூலதனமாகவும் தேர்தல் பிரசாரத்துக்காக பயன்படுத்தினர். இதன் விளைவே நாடு இந்தளவுக்கு சீரழிந்துபோக காரணமாய் அமைந்துள்ளது. பிச்சை எடுக்கின்ற நிலைக்கும் அடுத்தவரிடம் கையேந்தும் நிலைக்கும் நாம் தள்ளப்பட்டுள்ளோம்., இதற்கான பொறுப்பை இனவாத தலைவர்களும் அதற்குப் பக்கபலமாக நின்று தீனி போட்ட சில மதகுருமார்களுமே ஏற்க வேண்டும்.

திருகோணமலை மாவட்டம் முன்னர் இரண்டு தொகுதிகளாக மட்டும் அதாவது திருகோணமலை, மூதூர் ஆகிய இரண்டு தேர்தல் தொகுதிகளையே கொண்டிருந்தது. பின்னர், சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டு, சிங்களப் பெரும்பான்மையினர் அங்கு குடியேற்றப்பட்டனர். இந்த தேர்தல் தொகுதி 1690 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. திருமலை மாவட்டத்தில் திருமலை 585 சதுர கிலோமீற்றர் ஆகவும் மூதூர் 368 சதுர கிலோமீற்றர் ஆகவும் இருக்கின்றது.

திருமலை மாவட்டத்தின் புல்மோட்டையில் இருந்து 500 கி.மீ தூரத்துக்கு அப்பால் இருக்கின்ற தேரர் ஒருவர், கடந்த சில நாட்களுக்கு முன்னர் தனது அடியாட்களுடனும் ஆயுததாரிகளுடனும் வந்து அரிசிமலை, பொன்மலைக் குடா பிரதேசத்தில், முஸ்லிம்கள் வாழுகின்ற பகுதியில் புத்தர் சிலை வைக்க முயற்சித்ததில் களேபரம் ஏற்பட்டது. அப்பிரதேச மக்களை அங்கு வந்த ஆயுததாரிகள் அச்சுறுத்தியும் உள்ளனர். குறித்த மதகுருவுக்கு ஆயுதப் பாதுகாப்பு வழங்கியது யார்? அந்தப் பிரதேசத்தில் பௌத்தர்களும் இல்லை, அவ்வாறிருக்க, அப்பிரதேசத்துக்கு வலுக்கட்டாயமாக வந்து இவ்வாறன முயற்சி ஒன்றில் அவர் ஈடுபட்டிருக்கின்றார். இந்த நடவடிக்கை இனங்களுக்கிடையிலான விரிசலை ஏற்படுத்தும் நோக்கிலேயே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

புல்மோட்டையில் வாழும் மக்களுக்கு 10 பேச்சர்ஸ் கூட காணி இல்லாத நிலையில், அடுத்த பரம்பரைக்கும் எங்குமே காணி இல்லாத ஒரு நிலையில் இருக்கின்றபோது, இவ்வாறான ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதன் நோக்கம்தான் என்ன?

ஏற்கனவே, அந்தப் பகுதியில் தொல்லியல் திணைக்களம் 1200 ஏக்கரை வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தி, அதன் பின்னர் வெளிமாவட்டங்களிலிருந்து ஆட்களை கொண்டுவந்து விவசாயம் செய்ய வழிவகுத்துள்ளனர். தொல்லியல் திணைக்களம் ஒரு இனத்துக்கும் மதத்துக்கும் மட்டுமே பணிபுரிகின்ற அவல நிலை எல்லா இடங்களிலும் காணப்படுகின்றது. தற்போது, பொன்மலைக் குடாவிலும் சிலையை வைத்து, அந்த இடத்தை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதே இவர்களின் குறிக்கோளாக இருக்கின்றது.

இதேபோன்று வடக்கு, கிழக்கில் தொல்லியல் திணைக்களம், வனபரிபாலனத் திணைக்களம் ஆகியன, தாம் நினைத்த மாத்திரத்தில் மக்களின் பூர்வீகக் காணிகளை சுவீகரித்து, மக்களை நிர்க்கதிக்குள்ளாக்கி வருவதையும் நாம் காணமுடிகிறது.

எனவே, மேற்படி விடயத்தில் ஜனாதிபதி பாராமுகமாக இருக்காமல் நேரடியாகத் தலையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் வேண்டுகோள் விடுக்கின்றேன்-என்றார். (அ)



# சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையத்தில் மரம் நடும் நிகழ்வு

அக்கரைப்பற்று, ஏப். 08

சாய்ந்தமருது பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சாய்ந்தமருது பிரதேச கலாசார மத்திய நிலையத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது.

கலாசார மத்திய நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரி யூ.கே.எம். றிம்சானின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டதோடு, சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.முவஃபிகா, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ. ஹமீட், கணக்காளர் ஏ.ஜே.நுஸ்ரத் பானு, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.எம்.பழீல் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

# இந்து ஆலயங்களின் விவரம் திரட்டும் பணி

அக்கரைப்பற்று, ஏப். 08

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகம் இணைந்து அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்பான விவரங்களை திரட்டும் பணி பிரதேசம் பிரதேசமாக இடம் பெற்று வருகின்றது.

அந்த வகையில் திருக்கோவில், ஆலையடி வேம்பு பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட ஆலயங்கள், இந்து மன்றங்கள், கலைஞர்கள், அறநெறிப்பாடசாலை பொறுப்பாசிரியர்கள், இந்து கலைமன்றங்களை உள்ளடக்கி இச்செயலமர்வு இடம்பெற்றது.

இந்நிகழ்வானது திருக்கோவில் பிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும் உதவி பிரதேச செயலாளர் க.சதிசேகரன், மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு.ஜெயராஜி, திருக்கோவில் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நிஷாந்தினி தேவராஜ், மற்றும் கலாசார உத்தியோகத்தர்கள் ஆலய தர்மகர்த்தாக்கள், நிருவாகத்தினர், கலஞர்கள் மன்ற பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது ஆலயங்களின் அடிப்படைத் தகவல்கள், ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்கள், ஆலய மூர்த்தங்கள் தொடர்பான விபரங்கள், ஆலய உட்கட்டமைப்பு தொடர்பான தகவல்கள், ஆலயத்தின் வழிபாடு தொடர்பான் விடையங்கள், ஆலய நிர்வாகம் தொடர்பான விபரங்கள், ஆலய குருமார் தொடர்பான விபரங்கள், ஆலயத்தின் துணை நிறுவனங்களின் தகவல்கள் அதாவது அறநெறிப்பாடசாலை, திருப்பணிச்சபை, அன்னதானசபை, இளைஞர் மன்றங்கள் தொடர்பான விபரங்கள், ஆலயத்தின் நிதி தொடர்பான விபரங்கள், ஆலய பிணக்குகள் தொடர்பான தகவல்கள், ஆலயத்தினால் முன்னெடுக்கப்படும் சேவைகள் தொடர்பான தகவல்கள், கல்விப்பணி, சமூகப்பணி, சமயப்பணி, ஆலய அமைவிடம் தொடர்பான தவல்களை திரட்டப்பட்டன. (அ)

# அம்பாறையில் பல பிரதேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கை

அக்கரைப்பற்று, ஏப். 08

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம் றிபாஸின் வழிகாட்டலுக்கு அமைவாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட சாய்ந்தமருது, அட்டாளைசேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு போன்ற சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதேசங்களில் களப்பரிசோதனையும், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று முன் தினம் ஆரம்பித்த இந்த நிகழ்வானது எதிர்வரும் 10 திகதி வரை இடம்பெறவுள்ளது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெற்ற களப்பரிசோதனை மற்றும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையில் கல்முனை பிராந்திய தொற்றுநோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.சீ.எம் பசால் நேரடியாக விஜயம் செய்து ஆய்வை மேற்கொண்டார்.



சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே. எம் அர்சத் காரியப்பரின் பணிப்பின் பேரில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பொதுச்சுகாதார பரிசோதகர் எம்.என்.எம். பைலான் தலைமையிலான பொதுச்சுகாதார பரிசோதகர்கள், ஏனைய பிரதேசங்களை சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சாய்ந்தமருது இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஷமீலுள் இலாஹி, டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், சாய்ந்தமருது இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# ரயில்வே கடவை ஊழியர் கவனவீர்ப்புப் போராட்டம்

அக்கரைப்பற்று, ஏப். 08

கடந்த 10 வருடத்துக்கு மேலாக 250 ரூபாவுக்கு சேவையாற்றும் எங்களுக்கு, இனியும் காலம் தாழ்த்தாது ரயில்வே திணைக்களத்தில் நிரந்தர நியமனம் தருமாறு கோரி, ரயில்வே கடவை ஊழியர்கள் நேற்று முன் தினம் வாழைச்சேனை ரயில் நிலையத்துக்கு முன்பாக கவன யீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை ரயில் நிலையத்தில் ஒன்று கூடியவர்கள், தங்களது கோரிக்கை அடங்கிய பதாகைகளை கையில் ஏந்திய வாறு, வாழைச்சேனை - கொழும்பு வீதி வழியாக ஊர்வலமாகச் சென்று வாழைச்சேனை பொலிஸ் நிலையத்துக்கு முன் பாக, 'அரசே நிரந்தர நியமனத்தை தா' 'சம்பளத்தை அதிகரித்துத் தா' என்பன போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, தங்களது கோரிக்கை அடங்கிய மகஜரை, பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் சீ. யோகேஸ்வரன், வாழைச்சேனை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஆகியோரிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், இதற்கான தீர்வை சம்பந்தப்பட்ட போக்குவரத்து அமைச்சர், மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து பெற்றுத் தருவதாகத் தெரிவித்தார். (அ)

# ஆர்ப்பாட்டங்களில் பரவலாக வன்முறை!

## பாரிஸில் பிரபல உணவகத்துக்குத் தீ!



பாரிஸ், ஏப். 08

ஓய்வூதியச் சட்டத்தை எதிர்த்து நேற்று முன் தினம் பதினொராவது தடவையாக நடைபெற்ற வீதிப் பேரணிகள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் பங்களிப்பு முன்னைய தடவைகளை விடச் சிறிது குறைந்து காணப்பட்டது என்று செய்திகள் தெரிவிக்கின்றன .

எது எவ்வாறாயினும் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நிறுத்தப் போவதில்லை என்று தொழிற் சங்கங்கள் சூளுரைத்துள்ளன. அடுத்த 12 ஆவது கட்ட வேலை நிறுத்தமும் பேரணிகளும் எதிர்வரும் 13 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேரணிகளில் நாடு முழுவதும் இருபது லட்சம் பேரும் தலைநகர் பாரிஸில் நான்கு லட்சம் பேரும் அணி திரண்டனர் என்று தொழிற்சங்கங்களின் தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. பாரிஸிலும் லியோன் மற்றும் முக்கிய நகரங்களிலும் வன்முறைச் சம்பவங்கள் பரவலாக இடம்பெற்றுள்ளன. லியோன் நகரில் வர்த்தக நிலையம் ஒன்று சூறையாடப்பட்டது. வங்கிகள், பஸ் நிலையங்கள் தாக்கப்பட்டன. குப்பைக் கொள்கலன்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. தொழிலாளர்களது போராட்டங்களின் நடுவே புகுந்து வன்முறையில் ஈடுபட்ட சில கும்பல்களைக் கட்டுப்படுத்தப் பொலிஸார் தடியடி மற்றும் கண்ணீர்ப் புகை பிரயோகித்தனர். பாரிஸில் பிரபல பாரம்பரிய பிரெஞ்சு உணவகம் ஒன்றுக்குத் தீ வைக்கப்பட்டது. நகரின் ஆறாவது நிர்வாகப் பிரிவில் மொபாணாஸ் வட்டகையில் அமைந்துள்ள "லா ரொத்தோண்ட்" எனப்படும் உணவகத்தின் வெளி இருக்கைக் கூரைப் படங்குக்கு விசமிகள் தீ மூட்டினர். எனினும் மோட்டார் சைக்கிள் தீ அணைப்புப் பிரிவினர் அங்கு விரைந்து வந்து தீ மேலும் பரவுவதைத் தடுத்து விட்டனர்.

சுமார் முந்நூறு பேர் கொண்ட "கறுப்புக் கும்பல்" ஒன்று உணவகத்தைத் தாக்கியதுடன் அதற்குத் தீ மூட்டியது என்று பொலீஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிஸ் நகரில் மிகப் பழமை வாய்ந்த பாரம்பரிய உணவகம் மற்றும் மது அருந்தகம் அடங்கிய அந்தக் கடைத் தொகுதி இதற்கு முன்னரும் மஞ்சள் மேலங்கிப் போராட்டங்களின் போது இலக்கு வைத்துச்சேதப் படுத்தப் பட்டது குறிப்பிடத் தக்கது.

மக்ரோன் 2017 இல் அதிபர் தேர்தலின் முதற் சுற்றில் வெற்றி பெற்றதை அடுத்து தனது ஆதரவாளர்களுடன்"லா ரொத்தோண்ட்" உணவகத்திலேயே ஒன்று கூடித் தனது வெற்றியை ஆரவாரமாகக் கொண்டாடியிருந்தார். அன்று முதல் அது மக்ரோனின் அடையாளங்களில் ஒன்றாக மாறிவிட்டது. அதன் காரணமாகவே எதிர்ப்பாளர்களால் அந்த உணவகம் அடிக்கடி இலக்குவைக்கப் பட்டு வருகிறது.

பாரிஸ் வன்முறைகளில் பொலீஸார் உட்பட 75 பேர்வரை காயமடைந்தனர். அவர்களில் 13 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றனர். உள்துறை அமைச்சு வெளியிட்ட தகவலின் படி நாடெங்கும் வன்முறைகளில் ஈடுபட்ட 111 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை- பிரான்ஸின் சோசலிசக் கட்சி பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்து வெளியிட்டிருக்கின்ற ருவீற்றர் பதிவில், அரசுக்கு எதிரான போர் கடைசிவரை தொடரும் என்றும் மக்ரோனும் பிரதமர் எலிசபெத் போர்னும் ஓய்வூதியத் திட்டத்தை மீளப் பெறும் வரை போராட்டம் இடை விடாது தொடர்ந்த முன்னெடுக்கப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)



# பலஸ்தீனியப் போராளிக் குழுவை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல்!

ஜெருசலேம், ஏப். 08

லெபனானுக்குள்ளும், காஸா பகுதியிலும் பலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸுடன் தொடர்புடைய இலக்குகளைத் தாக்கியதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, தெற்கு லெபனானில் ஹமாஸின் பயங்கரவாத உள்கட்டமைப்பு தாக்கப்பட்டதாக, இஸ்ரேல் பாதுகாப்புப் படை குறிப்பிட்டுள்ளது.

இந்த வார தொடக்கத்தில் ஜெருசலேமின் அல்-அக்ஸா மசூதியை இஸ்ரேலிய பொலிஸார் தொடர்ச்சியாக இரவுகளில் சோதனையிட்டதை அடுத்து இரு தரப்புக்கும் இடையே பதற்றம் அதிகரித்தது.

இந்த மசூதி இஸ்லாத்தின் மூன்றாவது புனிதமான தளமாகும், மேலும் இஸ்ரேலிய தாக்குதல்கள் பலஸ்தீனியர்களுடன் வன்முறை மோதல்களைத் தூண்டியது மற்றும் பரந்த பிராந்தியத்தில் சீற்றத்தை ஏற்படுத்தியது.

ஏவுகணைகள் ஏவப்பட்ட போது லெபனானில் இருந்த ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே, இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு முன்னால் பலஸ்தீனியர்கள் தங்கள் கைகளைக் கட்டிக் கொண்டு உட்காரமாட்டார்கள் என கூறினார்.

இதேவேளை, லெபனானில் இருந்து ஹமாஸ் செயல்பட அனுமதிக்கமாட்டோம் என்றும் அதன் எல்லையில் இருந்து வெளிப்படும் ஒவ்வொரு நேரடி தீக்கும் அதுவே பொறுப்பு கூற வேண்டுமெனவும் இஸ்ரேல் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது.

(அ)

# உக்ரைன் மீதான ரஷ்யப் போரை நிறுத்துவதற்கு உதவவேண்டும்

## சீனாவிடம் பிரான்ஸ் ஜனாதிபதி வலியுறுத்தல்

பீஜிங், ஏப். 08

**உக்ரைனில் ரஷ்யாவின் போரை நிறுத்த உதவுமாறு பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங்கை வலியுறுத்தியுள்ளார்.**

**ரஷ்யாவை அதன் நினைவுக்கு கொண்டு வரவும், அனைவரையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து வரவும் உங்களை நம்ப முடியுமென பிரான்ஸ் ஜனாதிபதி, சீன ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார்.**



உலக அமைதியைப் பாதுகாக்கும் திறன் மற்றும் பொறுப்பு சீனாவுக்கும் பிரான்ஸுக்கும் இருப்பதாக ஸி ஜின்பிங் கூறியுள்ளார்.

ஆனால் இதுவரை அமைதியான தீர்வுக்கான வாய்ப்புகள் இல்லை என்றும் அதன் தாக்குதல் தொடரும் என்றும் ரஷ்யா பதிலளித்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பைக் கண்டிக்க மறுத்த மேற்கத்திய நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகள் பல ஆண்டுகளாக மோசமடைந்து வரும் நிலையில், மக்ரோனின் சீனாவுக்கான அரசு முறைப் பயணம் அமைந்துள்ளது.

மக்ரோனும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்த முயல்கிறார். அவருடன் ஐரோப்பிய ஆணையத் தலைவர் உர்சுலா வான் டெர் லேயனும் இணைந்துள்ளார்.

அவர் சீனத் தலைமையுடனும் ஒரு பெரிய வணிகக் குழுவுடனும் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க அழைத்தார்.

(அ)

# தஞ்சம் கோருவோர் தங்குவதற்கு மிதவைப் படகில் 500 அறைகள்!

## இங்கிலாந்தின் தெற்கு துறைமுகத்தில் தயார்

லண்டன்,ஏப். 08

ஆங்கிலக் கால்வாய் வழியே படகுகளில் வந்து தஞ்சம் கோருவோரை தற்காலிகமாகத் தங்க வைப்பதற்காக நீரில் மிதக்கும் தடுப்பு முகாம் ஒன்றை பிரிட்டிஷ் அரசு நிர்மாணித்துள்ளது.

நாட்டின் தெற்கு முனையில் அமைந்துள்ள போர்ட் லாண்ட் தீவின் துறைமுகத்தில் தரித்து நிற்கின்ற பெரிய மிதவைப் படகு ஒன்றையே வாடகைக்குப் பெற்று அது அகதிகள் முகாமாக மாற்றப்பட்டுள்ளது. அந்தப் படகில் ஐந்து அடுக்குகளில் 500 அறைகள் நிறுவப்பட்டுள்ளன. தனி ஆளாக வருகின்ற குடியேறிகளில் ஆண்கள் மட்டும்-அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படும் வரை-இந்த அறைகளில் தங்க வைக்கப்படுவார்கள். அடிப்படை வசதிகள் அனைத்தும் அவர்களுக்கு அங்கு செய்யப்படும் என்று பிரிட்டிஷ் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படகு அகதிகள் மற்றும் குடியேறிகளை ஹோட்டல்களிலும் அவர்களுக்கான நலன்புரி நிலையங்களிலும் தங்க வைப்பதால் நாட்டின் புகலிட நிர்வாகக் கட்டமைப்புகள் பெரும் அழுத்தங்களைச் சந்தித்து வருகின்றன.

என்றும் பெருமளவு அரச நிதியும் பொதுமக்களது வரிப்பணமும் அதற்கு விரயமாகின்றது என்றும் உள்துறை அமைச்சு கூறுகிறது. ஆனால் கடல் நீரில் சிறை போன்ற அறைகளுக்குள் குடியேறிகளை அடைத்து வைக்கின்ற இந்தத் திட்டத்துக்கு அகதிகளது உரிமைகளைப் பேணுகின்ற அமைப்புகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.



மத்தியதரைக் கடலைக் கடந்து நாட்டின் கரைகளுக்கு வந்தடைகின்ற ஆயிரக் கணக்கான குடியேறிகளை றுவாண்டா போன்ற பாதுகாப்பான மூன்றா வது நாட்டில் தங்க வைப்பதற்கான திட்டத்தை பிரிட்டிஷ் உள் துறை அமைச்சு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

அதேசமயம் இந்த மிதவைப் படகு வீட்டுத் திட்டமும் வரும் நாட்களில் வெளிநாட்டுக் குடியேறிகளது தங்குமிடமாக மாற வுள்ளது.

(அ)

ஈழநாடு



# பெங்களூரை பந்தாடியது கொல்கத்தா நைற் ரைடர்ஸ்!

கொல்கத்தா, ஏப். 08

பெங்களூார் றோயல் சலஞ்சர்ஸ் அணியை 81 ஓட்டங்களால் வீழ்த்தி கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூார் அணி முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி, கொல்கத்தா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ஆரம்ப ஆட்டக்காரரான ரஹமதுல்லா குர்பாஸ் பொறுப்புடன் ஆடி அரை சதமடித்து 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வெங்கடேஷ் ஐயர், மந்தீப் சிங், நிதிஷ் ராணா, அண்ட்ரூ ரசல் ஆகியோர் விரைவில் ஆட்டமிழந்தனர். இதனால் கொல்கத்தா அணி 5 விக்கெட்டுக்கு 89 ஓட்டங்களை எடுத்து திணறியது.

அடுத்து இறங்கிய ரிங்கு சிங், ஷர்துல் தாகூர் ஜோடி பெங்களூார் அணியின் பந்து வீச்சை சிக்ஸர், பௌண்ட்ரிகளாக விளாசினர். குறிப்பாக, ஷர்துல் தாகூர் 20 பந்தில் அரை சதமடித்து அசத்தினார். அவருக்கு ரிங்கு சிங் நன்கு ஒத்துழைப்பு கொடுத்தார்.

இந்த ஜோடி 6ஆவது விக்கெட்டுக்காக 103 ஓட்டங்களை குவித்தது. ரிங்கு சிங் 32 பந்துகளில் 3 சிக்ஸர், 2 பௌண்ட்ரி உள்பட 46 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார். அதிரடியில் மிரட்டிய ஷர்துல் தாகூர் 29 பந்துகளில் 3 சிச்ஸர், 9 பௌண்ட்ரி உள்பட 68 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

இறுதியில், கொல்கத்தா அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 7 விக்கெட்களை இழந்து 204 ஓட்டங்களை எடுத்தது.

இதையடுத்து, 205 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடியது பெங்களூார் அணி.

தொடக்கம் கொடுத்த விராட் கோலி 21, டூ பிளசிஸ் 23 அடுத்து வந்த மைக்க் பிராச்வெல் 19 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர். நடுவரிசை துடுப்பாட்ட வீரர்கள் எவருமே நிலைக்கவில்லை. மக்ஸ்வெல் 5, ஹர்சல் பட்டேல் 0, சப்ராஸ் அகமட் 1, தினேஷ் கார்த்திக் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க பின்னர் பின்வரிசையின் டேவிட் வில்லி மட்டும் ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.



இறுதியில் 17.4 ஓவர்களில் பெங்களூர் 123 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

வருண் சக்கரவர்த்தி 4, சுயாஷ் சர்மா 3, சுனில் நரைன் 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். (ஐ)



## ஐ. பி. எல். தொடர்களில் தவான் புதிய சாதனை!

பஞ்சாப், ஏப். 08

ஐ. பி. எல். போட்டிகளில் 50 முறை 50 ஓட்டங்களுக்கும் அதிகமான ஓட்டங்கள் எடுத்த 2ஆவது இந்திய வீரர் என்ற சாதனையை ஞ்சாப் அணியின் தலைவர்ட ஷிகர் தவான் படைத்துள்ளார்.

ராஜஸ்தானுக்கு எதிரான போட்டியில் தவான், 86 ஓட்டங்கள் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். இதன்மூலம் ஐ. பி. எல். போட்டிகளில் தனது 48ஆவது அரைச்சதத்தை ருசித்த தவான், விராட் கோலிக்குப் பிறகு 50க்கும் அதிகமான ஓட்டங்களை 50 முறை எடுத்த இந்திய வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதுவரை 208 ஐ. பி. எல். போட்டிகளில் ஆடியுள்ள தவான், 6 ஆயிரத்து 369 ஓட்டங்கள் எடுத்துள்ளார். (ஐ)

## பெங்களூர் அணியில் பர்னெல் சேர்க்கப்பட்டார்!





பெங்களூர், ஏப். 08

தென்னாபிரிக்கா அணியின் வெய்ன் பர்னெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

16ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் தொடரில் இருந்து பெங்களூார் அணியின் வேகப்பந்துவீச்சாளர் ரீஸ் டாப்லி விலகியுள்ளார். மும்பைக்கு எதிரான போட்டியில் இவர் காயம் அடைந்தார்.

இதனையடுத்து காயத்தின் பாதிப்பு அதிகமாக இருந்தால் டாப்லி நடப்பு ஐ. பி. எல். தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்த நிலையில் அவருக்கு பதிலாக பெங்களூர் அணியில் தென்னாபிரிக்கா அணியின் வேகபந்துவீச்சா ளர் வெய்ன் பர்னெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே காயம் காரணமாக பெங்களூர் அணியிலிருந்து ரஜத் படித்தார் விலகினார். அவருக்கு பதிலாக இந்திய வீரர் வியாசக் விஜய் குமார் சேர்க்கப்பட்டுள்ளார்.



## ஐ. பி. எல். போட்டியில் பானுக ஆடுவாரா?

பஞ்சாப், ஏப். 08

ஐ. பி. எல். நடப்பு தொடரின் எஞ்சிய போட்டிகளில் பானுக ராஜபகஷ விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் பானுக ராஜபக்ஷ ஐ. பி. எல். தொடரில் பஞ்சாப் கிங்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். இவர், கடந்த புதன்கிழமை ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக விளையாடியிருந்தார்.

இந்தப் போட்டியில் ஷிகர் தவான் துடுப்பெடுத்தாடியபோது எதிர்முனையில் பானுக ராஜபக்ஷ நின்றிருந்தார். அவர் அடித்த பந்து பானுக ராஜபக்ஷவின் கையைப் பதம் பார்த்தது. இதனால், அவர் தொடர்ந்து விளையாட முடியாமல் அந்தப் போட்டியில் அரங்கம் திரும்பினார்.

அவரின் காயம் குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. இந்த நிலையில், அவர் தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்பதில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உதைபந்தாட்ட தரவரிசை:

## 6 ஆண்டுகளின் பின்னர் ஆர்ஜென்ரீனா முதலிடம்!



சூரிச், ஏப். 08

பிபா தரவரிசை பட்டியலில் 6 வருடங்களுக்கு பிறகு முதன்முறையாக முதல் இடத்துக்கு முன்னேறியுள்ளது உலக சம்பியனான ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணி.

ஆர்ஜென்ரீனா அணி கடந்த மாதம் நடைபெற்ற நட்பு ரீதியிலான போட்டியில் இரு போட்டிகளில் வெற்றி கண்டிருந்தது. இதன் மூலம் தரவரிசையில் ஓர் இடம் முன்னேற்றம் கண்டு முதலிடத்தை பிடித்துள்ளது. அந்த அணி 6 வருடங்களுக்குப் பிறகு தற்போது தான் தரவரிசை பட்டியலில் முதலிடத்தை பிடித்துள்ளது.

இதேவேளையில் கடந்த மாதம் இறுதியில் மொரோக்கோவிடம் தோல்வி அடைந்த பிரேசில் அணியானது தரவரிசையில் 3ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

பிபா உலகக் கிண்ணத்தில் 2ஆவது இடம் பிடித்த பிரான்ஸ். தரவரிசையில் ஓர் இடம் முன்னேறி 2ஆவது இடத்தை அடைந்துள்ளது அந்த அணி. சமீபத்தில் நடைபெற்ற ஐரோப்பிய உதைபந்தாட்ட சம்பியன்ஷிப் தகுதி சுற்றில் நெதர்லாந்து, அயர்லாந்து அணிகளுக்கு எதிரான போட்டிகளில் பிரான்ஸ் வெற்றி பெற்றிருந்தது.

பெல்ஜியம் 4ஆவது இடத்தில் தொடர்கிறது. இத்தாலி உள்ளிட்ட இரு அணிகளுக்கு எதிராக சமீபத்தில் வெற்றியை பதிவு செய்த இங்கிலாந்து அணி 5ஆவது இடத்தில் உள்ளது. நெதர்லாந்து, குரோஷியா, இத்தாலி, போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய அணிகள் முறையே 6 முதல் 10ஆவது இடங்களில் உள்ளன.

ஆசிய அணிகளில் ஜப்பான் 20ஆவது இடத்தை பிடித்துள்ளது. (ஐ)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் முன்பு இருந்ததைவிட மோசமானதல்ல!

### கூறுகின்றார் ராஜித சேனாரத்ன



கொழும்பு, ஏப். 08

**புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஏற்கனவே காணப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டத்தைவிட மோசமானதல்ல என பாராளுமன்ற உறுப்பினர் உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் வன்முறைகள், இனக்கலவரங்கள் ஏற்பட்ட போது அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே அப்போதைய தலைவர்கள் அதனைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அன்று பயங்கரவாதத் தடைச் சட்டம் காணப்படவில்லை. அத்தோடு இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும், வடக்கில் 30 ஆண்டுகள் உள்நாட்டு யுத்தம் இடம்பெற்றது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுள்ள நாடுகள் சர்வதேச பயங்கரவாத அச்சுறுத்தல் காரணமாக அதனை நடைமுறைப்படுத்துகின்றன.

ஆனால் இலங்கைக்கு அவ்வாறு சர்வதேச அச்சுறுத்தல்கள் எவையும் இல்லை.

புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் முன்னர் காணப்பட்ட பயங்கரவாதத் தடை சட்டத்தை விட மோசமானதல்ல என்ற போதிலும், அதுவும் சிறந்தல்ல என்பதே எனது நிலைப்பாடாகும்-என்றார். (அ)

# பழங்கால நாணயங்களுடன் நான்கு சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஏப். 08

பழங்கால நாணயங்களுடன் 04 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கந்தளாய் குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

ஹபரணையில் இருந்து கந்தளாய் நோக்கி பயணித்த கார் ஒன்றைச் சோதனை செய்தபோது சந்தேகநபர்களிடம் தொல்பொருள் பெறுமதி வாய்ந்ததாக சந்தேகிக்கப்படும் 389 நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் உள்ளடங்குவதாக கூறப்பட்டது. (அ)

# மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் உருவாக்கம்

### கூறுகின்றது மொட்டுக் கட்சி



கொழும்பு, ஏப். 08

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலம் பயங்கரவாதத்திற்கு எதிரானதே தவிர, ஜனநாயகத்துக்கு எதிரானதல்ல என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவே பயங்கரவாத எதிர்ப்பு தடைச்சட்டம் உருவாக்கப்படவுள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தொழிற்சங்கத்தினர் பொருளாதாரத்தை பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் தொழிற்சங்கப் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

தங்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மக்களையும், அரசாங்கத்தையும் இவர்கள் நெருக்கடிக்குள் ளாக்குகிறார்கள்.

நாடு என்ற ரீதியில் முன்னேற்றமடைய வேண்டுமாயின் ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும். அதற்கு கடுமையான சட்டங்கள் இயற்றப்படவேண்டும்.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்தால் ஒரு போதும் முன்னேற்றமடைய முடியாது-என்றார். (அ)

# அரசாங்கம் பதில் வழங்கினால் போராட்டத்தை கைவிட தயார்!

### பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கம்

கொழும்பு, ஏப். 08

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழில்சங்க போராட்டத்துக்கு அரசாங்கம் முறையான பதிலொன்றை வழங்கினால் போராட்டத்தை கைவிடுவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், இதுவரை பேச்சுக்குக் கூட அரசாங்கம் அழைப்பு விடுக்கவில்லை என பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழில் சங்க சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷஷ்ம பென்னெஹ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் முன்னெடுத்துவரும் தொழில்சங்க போராட்டம் ஒரு மாத காலத்தை அண்மித்துள்ள நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக குறிப்பிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் புதிய வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் கடந்த மார்ச் 9ஆம் திகதி தொழில்சங்க போராட்டத்தை ஆரம்பித்தது. தற்போது ஒரு மாதகாலத்தை அண்மித்துள்ளது. ஆனால், எமது கோரிக்கை தொடர்பாக அரசாங்கம் இது வரை எந்த பதிலையும் வழங்கவில்லை.

அரசாங்கம் முறையான பதிலொன்றை வழங்கினால் தொழில் சங்க போராட்டத்தை நிறுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். எமது கோரிக்கை தொடர்பாக குறைந்த பட்சம் பேச்சுக்குக்கூட ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்காமல் இருப்பது, இதனை காலம் தாழ்த்துவதற்காகும்.

அரச தரப்பில் பொறுப்பு வாய்ந்த யாராவது எம்முடன் கலந்துரையாடி, எமது கோரிக்கைகள் தொடர்பில் பதிலளிக்க குறிப்பிட்ட காலவரையறை ஒன்றை தெரிவித்தால், அது தொடர்பில் எங்களுக்கு ஒரு தீர்மானத்துக்கு வரலாம். ஆனால், அரசாங்கம் எதற்கும் தயார் இல்லாத நிலையையே காண்கிறோம்.

அத்துடன், எமது தொழில் சங்க போராட்டம் காரணமாக மாணவர்களுக்கு நட்டம் ஏற்படும்போது அதனை எந்த சந்தர்ப்பத்திலும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாணவர்களுக்கு தெரிவித்திருக்கிறோம். பரீட்சை நடவடிக்கைகளும் இடம்பெறுகின்றன.

அதேநேரம் கல்வி பொதுத் தாராதர உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு நடவடிக்கையில் பல விடயங்கள் இருக்கின்றன. அதாவது, பரீட்சை இடம்பெற ஒரு மாதகாலத்துக்கு முன்னர் எமது கோரிக்கையை முன்வைத்தோம். பரீட்சை இடம்பெற்று ஒரு மாதகாலம் நிறைவடைந்துள்ளது. அப்படி இருந்தும் அரசாங்கம் இதுவரை எந்த பதிலையும் வழங்காமல் இருக்கிறது. அரசாங்கம் ஏதாவது ஒரு பதிலை வழங்கினால்தான் எமக்கு அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் தெரிவிக்கலாம்.

அதனால், இந்த விடயத்தில் எம்மை குற்றம்சாட்டுவதற்கு பதிலாக அரசாங்கம் இதுதொடர்பாக எம்முடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்துக்கு வராமல் இருக்கிறது என்றே கேட்க வேண்டும். அரசாங்கம் இன்று முறையான பதிலை வழங்கினால் மறுதினமே எமது கடமையை ஆரம்பிப்போம் - என்றார். (ஐ)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து வசதிகள்

கொழும்பு, ஏப். 08

பண்டிகை காலத்தை முன்னிட்டு பயணிகளுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விசேட வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் நிலான் மிராண்டா இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

நேற்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இடம்பெறும் இந்த வேலைத்திட்டத்திற்காக 7 ஆயிரம் பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

# பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுக்கு புதிதாக ஆறு உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, ஏப். 08

பொது சேவைகள் ஆணைக் குழுவிற்கு ஆறு புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ஊடகப்பிரிவினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரி சனத் ஜயந்த எதிரிவீர பெயரிடப்பட்டுள்ளார்.

இதற்கமைய, சித்தி மெரினா மொஹமட், நரசிங்க ஹேரத் முதியன்சேலாகே சித்ரானந்தா, பேராசிரியர் நாகநாதன் செல்வக்குமரன், மாணிக்க படத்துருகே ரோஹன புஷ்பகுமார, கலாநிதி அங்கம்பொடி தமிதா நந்தனி டி சொய்சா, ரஞ்சினி நடராஜ பிள்ளை மற்றும் பல்லேகம சந்திரரத்ன ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

# சிறுகடற்றொழிலாளர்களை பாதுகாக்க ஒத்துழையுங்கள்

### சர்வதேச அமைப்புக்களுக்கு டக்ளஸ் அழைப்பு

கொழும்பு, ஏப். 08

சிறு கடற்றொழிலாளர்களை பாதுகாத்து அவர்களின் வாழ்க்கை தரத்தினை முன்னேற்றுவதற்கு தன்னால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்குமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சர்வதேச அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் சிறுகடற்றொழிலாளர்களை பாதுகாப்பது தொடர்பான ஆய்வு அறிக்கையின் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய கடற்றொழில் அமைச்சரினால் இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மீனவர் ஒற்றுமை அமைப்பு, உலகளாவிய மூலோபாய வரைபிற்கான ஆலோசனைக் குழு மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பு போன்ற சர்வதேச அமைப்புக்களின் முயற்சியால் தயாரிக்கப்பட்டுள்ள ஆய்வு அறிக்கையின் அறிமுக நிகழ்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் காணொளி ஊடாக கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கையில் சுமார் 200,000 சிறு கடற்றொழிலாளர்கள் இருக்கின்ற நிலையில் அவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கும் கடற்றொழில் அமைச்சர் அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொண்டுள்ளது.

மேலும், இந்தியக் கடற்றொழிலாளர்கள் அத்துமீறி இலங்கை கடல் பரப்பினுள் நுழைந்து சட்ட விரோத தொழிலான இழுவைமடி வலை தொழிலை மேற்கொள்வதால் இலங்கையின் சிறு தொழிலாளர்கள் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர்.

இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரத்தை சுமூகமாக தீர்ப்பதற்கு இராஜதந்திர ரீதியாகவும் சட்ட ரீதியாகவும் கலந்துரையாடல்கள் மூலமாகவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளேன்.

எனது முயற்சிகளுக்கு சர்வதேச அமைப்புக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறேன் - என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கையில் வாழும் இந்துக்களுக்கு நீதி கேட்டு புதுடில்லியில் போராட்டம்!




புதுடில்லி, ஏப். 08

இலங்கையில் வாழும் இந்துக்களுக்கு நீதி கோரி டில்லியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்துக்கள் அமைப்பினரால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையில் உள்ள கோவில்களை இடிப்பதும், இந்துக்களுக்கு தீங்கு விளைவிப்பதும் ஒரு கலாசார இனப்படுகொலை என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், இலங்கையில் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி பணிகள் என்ற போர்வையில் பழங்கால இந்துக் கோவில்கள் தொடர்ந்தும் அரசாங்கத்தால் இடிக்கப்படுகின்றன.

பழமையான வரலாற்று மற்றும் மத முக்கியத்துவம் வாய்ந்த இந்து கோவில்களை இடித்து, இந்து தமிழ் சமூகத்தின் கலாசார இனப்படுகொலையை இலங்கை அரசாங்கம் செய்து வருவதாக போராட்டக்காரர்கள் குற்றம் சுமத்தினர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்ல தீர்மானித்துள்ள நிலையில், இந்த விவகாரம் உலக இந்து அமைப்புக்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் நடப்பு அரசாங்கம் தொல்லியல் ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் உற்பத்திப் பணிகள் என்ற போர்வையில் பழமைவாய்ந்த இந்துக் கோவில்களை இடிப்பதும், அழிப்பதும் சகித்துக் கொள்ள முடியாத குற்றமாக கருதப்படுகின்றது.

இதுபோன்ற செயற்பாடுகள் இந்துக்களுக்கும், இந்தியாவுக்கும் எதிரான தீங்கிழைக்கும் செயல் என இந்து இயக்கத்தின் சர்வதேச தலைவர் சிறி அருண் உபாத்யாய் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்த பிரச்னையை இந்திய அரசு உணர்ந்து, இந்தியா வரும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கடும் எதிர்ப்பை தெரிவிக்கவேண்டும் எனவும் அவர் கூறினார். (அ)

# கந்தளாய் பகுதியில் ரயில் புரண்டதில் 17 பேர் காயம்!



திருகோணமலை, ஏப். 08

கந்தளாய் - அக்போபுர தொடரூந்து நிலையத்துக்கு அருகில், தொடரூந்து ஒன்று தடம்புரண்டதில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த 17 பேரும் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரயில் தடம்புரண்டதில் இரு ரயில் கட்டுப்பாட்டாளர்களும், 15 பயணிகளும் காயமடைந்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# புதிய சட்டத்துக்கு சு.க. முழு எதிர்ப்பு

கொழும்பு, ஏப்ரல் 08

அரசாங்கம் கொண்டுவரவுள்ள உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு, சுதந்திரக் கட்சியானது முழுமையான எதிர்ப்பை வெளியிடுகின்றது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் விசேடக் கூட்டம் நேற்றுக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன் பின்பு ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர், "ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு மேலாக உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது அச்சுறுத்தல் மிக்கதாகக் காணப்படுகின்றது.

போராட்டங்களை முடக்குவதற்கும் ஊடகங்களை முடக்குவதற்கும் யாரையும் கைதுசெய்வதற்குமான அதிகாரம் இந்த சட்டத்தின் மூலம் அரசாங்கத்துக்கு கிடைக்கின்றது.

எந்த மாவட்டத்திலும் எந்த பிரதிபொலிஸ்மா அதிபரும் யாரையும் தடுப்புக்காவலில் வைப்பதற்கான அதிகாரம் இந்த சட்டமூலத்தின் மூலம் கிடைக்கின்றது.

இதனூடாக அதிகார துஷ்பிரயோகம் இடம்பெறலாம்.

பாரிய சிக்கல்கள் இந்த சட்டமூலத்தின் மூலம் ஏற்படுகின்றது. எனவே சுதந்திரக் கட்சி இந்த சட்டமூலத்தை முற்றாக எதிர்க்கின்றது.

ஏகாதிபத்திய ஆட்சிமுறைமைக்கே இந்த சட்டமூலம் வழிவகுக்கின்றது.

சுதந்திர கட்சியானது இம்முறை மே தினத்தை கண்டி நகரில் நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

இம்முறை மே தினத்தை எவ்வாறு கொண்டாடுவது என்பது தொடர்பிலேயே நாம் இன்றைய (நேற்றைய) கலந்துரையாடலில் அதிக கவனம் செலுத்தினோம்.

கட்சியின் சகல தரப்பினருடன் கலந்துரையாடி பாரிய மேதின கூட்டத்தை இம்முறை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

கடந்த மூன்று வருடங்களாக மேதினக் கூட்டங்களை நடத்துவதற்கான சூழல் நாட்டில் இருக்கவில்லை.

விசேடமாக கொரோனா தொற்றுப் பரவல் அதனுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக மேதினக் கூட்டங்களை நடத்திக்கொள்ள முடியாமல் போனது. எனவே, இம்முறை சிறந்த முறையில் மேதினத்தை நடத்துவதற்கு கட்சி என்ற ரீதியில் நாம் திட்டமிட்டுள்ளோம்.

சுதந்திரக் கட்சியுடன் இணைந்த சகல தொழிற்சங்கங்களுடனும் இணைந்து இம்முறை மேதினத்தை கொண்டாடுவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்-என்றார். (அ)

# புவியியல் ரீதியிலான அச்சுறுத்தல் இலங்கைக்கு இருக்கவே செய்கிறது

## சாகர காரியவசம் எம்.பி.

கொழும்பு, ஏப். 08

30 வருட யுத்தம் என்பது நிறைவுக்கு வந்தாலும் புவியியல் அமைவிடத்துக்கு அமைவாக அச்சுறுத்தல் இருக்கவே செய்கின்றது என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவில் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகிலுள்ள அநேகமான நாடுகளில் இந்த பயங்கரவாத நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் பலமானதாகக் காணப்படுகின்றன.

அமெரிக்கா போன்ற நாடுகளில் கடுமையான சட்டங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் உண்மையாக பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது அமுலில் இருக்க வேண்டியது அவசியமானதாகும்.

பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாகவே எமது நாடு 75 வருடங்களாக முன்னோக்கி பயணிக்க முடியாதுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு மூன்று தடவைகள் முகம்கொடுத்த நாடாக எமது நாடு காணப்படுகின்றது. அதேபோன்று 30 வருட யுத்தத்திலிருந்து மீண்ட நாடாக எமது நாடு காணப்படுகின்றது. மேலும் உயிர்த்த ஞாயிறு தற்கொலை தாக்குதல்கள் காரணமாக மேலும் பல அழிவுகளை நாடு எதிர்கொண்டது.

இவ்வாறான பயங்கரவாத செயற்பாடுகள் மூலம் அபிவிருத்திக்கான சந்தர்ப்பங்களை தவறவிட்ட நாடு என்ற வகையில் எமது நாட்டில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் இருப்பது அவசியமாகும்.

உலகில் எந்த நாட்டிலும் பயங்கரவாதத்திற்கு எதிராக சட்டங்கள் இயற்றப்படும்போது அந்த சட்டங்களின் மூலம் மக்களின் ஜனநாயக உரிமை முடக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதில்லை.

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்காக இருக்க வேண்டுமே தவிர, மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்குவதாக அமையக்கூடாது என்று கட்சி என்ற முறையில் நாங்கள் கருதுகின்றோம்.

தற்போது பயங்கரவாதம் முடிந்துவிட்டதாக கருதினால் அதனை ஒருமுறையல்ல இரண்டுமுறை சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

30 வருட யுத்தம் என்பது நிறைவுக்கு வந்தாலும் புவியியல் அமைவிடத்துக்கு அமைவாக அச்சுறுத்தல் இருக்கவே செய்கின்றது. நாடு என்ற முறையில் எந்த வேளையிலும் பயங்கரவாதிகள் நாட்டுக்குள் ஊடுறவலாம் என்பது தொடர்பிலான அவதானத்துடன் இருந்தால் சிறந்தது.

புவியியல் இருப்பிடத்துக்கு அமைவாக நமது நாடு வளர்ச்சியடையும் போது, அதற்கு எதிராக எப்போதும் சில வெளிநாட்டு சக்திகள் தலையிடுகின்றன. மேலும் நாட்டில் பயங்கரவாதம் பல்வேறு வழிகளில் செயல்படுத்தப்படலாம்.

ஒரு நாடாக நாம் பயங்கராவாதம் என்பது முடிவுக்கு வந்துவிட்டது என்ற நிலைக்கு வந்தால் மாபெரும் வரலாற்றுத் தவறைச் செய்துவிடுவோம்.

அவ்வாறு சிந்திக்காமல், எந்த நேரத்திலும் பயங்கரவாதம் வரலாம் என்ற எண்ணத்தில் இருந்து, அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பதே ஒரு நாடாக நாம் முன்னேறிச் செல்வதே சிறந்தது - என்றார். (அ)

# மூன்று பொருள்கள் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஏப். 08

லங்கா சதொச நிறுவனம் நேற்று வெள்ளிக்கிழமை அமுலுக்குவரும் வகையில் மூன்று பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

இதற்கமைய 425 கிராம் ரின் மீன் 30 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 490 ரூபாவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோகிராம் பெரிய வெங்காயத்தின் விலை 22 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 97 ரூபாவாகும்.

கோதுமை மாவின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 225 ரூபாவாகக் காட்டப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தத்துக்கு உதவியது சீனா!

கொழும்பு, எப். 08

இலங்கைக்கான கடன் நிவாரண ஒப்பந்தத்தை எட்டுவதற்கு சீனா உதவியது என சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் சாம்பியா, கானா மற்றும் எத்தியோப்பியா போன்ற நாடுகளுக்கான கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தங்களை அடைய சீனா தனது பணியை விரைவுபடுத்தவேண்டும் என்றும் சீனாவின் புதிய உயர்மட்ட பொருளாதார அதிகாரி லி கியாங்கிடம் ஜோர்ஜீவா கோரிக்கை விடுத்தார்.

மெரிடியன் ஹவுஸ் மற்றும் பொலிட்டிகோ நடத்திய ஒரு நிகழ்வில், உரையாற்றிய ஜோர்ஜீவா, கடன்களை கையாள்வதற்கு சீனா பல நிறுவனங்களைக் கொண்டுள்ளமையால், தாமதங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

எனினும் சீனா தமது பங்கேற்பை விரைவுபடுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 08.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.